திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2020, விலை ரூ.5/-

2020 மார்ச்
05 முதல் 09 வரை
திருமலையப்ப ஸ்வாமி
தெப்போத்ஸவம்



# திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் 23-03-2020 முதல் 31-03-2020 வரை





**23-03-2020**
**திங்கட்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**24-03-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**25-03-2020**
**புதன் கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**26-03-2020**
**வியாழக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**27-03-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**28-03-2020**
**சனிக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**29-03-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**30-03-2020**
**திங்கட்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**31-03-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

*ப$_4$வாந் பீ$_4$ஷ்மச்ச கர்ணச்ச*
*க்ருபச்ச ஸமிதிஞ்ஜய: |*
*அச்வத்த$_2$ாமா விகர்ணச்ச*
*ஸௌமத$_3$த்திஸ்ததை$_2$வ ச ||*

**(துரோணாசார்யரான) தாங்களும்,**
**பாட்டனார் பீஷ்மரும், கர்ணனும்,**
**யுத்தங்களில் வெற்றியே பெறுகின்ற**
**கிருபாசார்யரும், அவ்வாறே**
**அசுவத்தாமாவும், விகர்ணனும்,**
**சோமதத்தனின் மகன் பூரிச்ரவஸ்ஸும்**
**யுத்தத்தில் திறமைப் பெற்றவர்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–8*





*"க்ருஷ்ணத்வதீய பதபங்கஜ பஞ்ஜராந்த*
*மத்யைவ மேவிசது மானஸ ராஜஹம்ஸ: |*
*ப்ராணப்ரயாண ஸமயே கப வாத பித்தை: |*
*கண்டாவரோத நவிதௌ ஸ்மரணம் குதஸ்தே?"*

**"ஹே கண்ணா! உயிர் உடலை விட்டு நீங்கும்போது கபம், வாதம், பித்தம் ஆகியவை என் தொண்டையை அடைக்கும். அப்போது உன் நினைவு எப்படி வரும்? ஆகையால் என் மனமாகிய ராஜஹம்ஸம் இன்றே உன் திருவடிகளாகிற கூட்டினுள் நுழைந்து விடட்டும்"**

*- முகுந்த மாலை*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் மாசி/பங்குனி மாதம் உத்தராயணம்
# சிசிரருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 மார்ச் 2020

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | ஞாயிறு | சஷ் | பர | கிருத்திகை, வைத்-சிரா, தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 2 | 19 | திங்கள் | சப் | கார் | தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம் |
| 3 | 20 | செவ் | அஷ் | ரோகி | புதன் கி.உதயம், திருக்கச்சி நம்பிகள் சாத்துமுறை. |
| 4 | 21 | புதன் | நவ | மிரு | மாலையில் சமாதான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட. |
| 5 | 22 | வியா | தச | திரு | வாஸ்து கா.10.06-10.42., திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம், குலசேகராழ்வார் திருநட்சத்திரம். |
| 6 | 23 | வெள்ளி | ஏகா | புன | ஆமலகி ஏகாதசி, தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கருடோத்ஸவம் |
| 7 | 24 | சனி | துவா | பூச | சனிப்பிரதோஷம், நரசிம்மத்வாதசி. |
| 8 | 25 | ஞாயிறு | திர/சசி | ஆயி | க்ஷய திதி, மாசி மகம், நடராஜர் அபிஷேகம். |
| 9 | 26 | திங்கள் | பௌ | பூர | ஹோலி, பௌர்ணமி, திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, குமாரதாரா தீர்த்த முக்கோட்டி, தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி திருத்தேர். |
| 10 | 27 | செவ் | பிர | உத் | பால்குணபஹுள புதன் வ.நி. புதன் கி.உதயம், ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 11 | 28 | புதன் | துவி | ஹஸ் | திதித்வயம். |
| 12 | 29 | வியா | திரு | சித் | சங்கடஹர சதுர்த்தி. |
| 13 | 30 | வெள்ளி | சது/பஞ் | சுவா | ரங்க பஞ்சமி க்ஷயதிதி. |
| 14 | 1 | சனி | சஷ் | விசா | சீதி சூரியன் மீனம் ப.11ம.53நி. |
| 15 | 2 | ஞாயிறு | சப் | அனு | திஸ்ரோஷ்டகா, ஸீதலாஸப்தமி. |
| 16 | 3 | திங்கள் | அஷ் | கேட் | காலாஷ்டமி, அஷ்டகா வ்ய-சிரா. |
| 17 | 4 | செவ் | நவ | மூல | அன்வாஷ்டகா. |
| 18 | 5 | புதன் | தச | பூரா | தீப்பெட்டி, பட்டாசுகள் தயாரிக்க |
| 19 | 6 | வியா | ஏகா | உத்ரா | பாபவிமோசனி ஏகாதசி கரிநாள், ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 20 | 7 | வெள்ளி | துவா | திவோ | விருத்தி திதி-செவ்வாய்-குரு யுதி, ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம் நிறைவு. |
| 21 | 8 | சனி | துவா | அவி | சனிப்பிரதோஷம், அன்னமய்யா நினைவு தினம். |
| 22 | 9 | ஞாயிறு | திர | சத | மாத சிவராத்திரி, செவ்வாய் மகரம், திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 23 | 10 | திங்கள் | சசி | பூரட் | சர்வ அமாவாசை, திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி சூரிய சேவையை முன்னிட்டு தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 24 | 11 | செவ் | அமா | உத்ரட் | கடன்தீர்க்க. |
| 25 | 12 | புதன் | பிர | ரேவ | சைத்ர-சுத்த, யுகாதி-சாந்த்ர-சார்வரி வருட பிறப்பு. சந்திர தரிசனம், திருமலையப்ப ஸ்வாமி நித்யோத்ஸவம் ஆரம்பம், திருமலையப்ப ஸ்வாமி யுகாதி ஆஸ்தானம். |
| 26 | 13 | வியா | துவி | ரேவ | சட்ட ஆலோசனைகள் பெற. |
| 27 | 14 | வெள்ளி | திரு | அஸ் | சுபநாள், திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி கருட சேவை, நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி சூரிய சேவையை முன்னிட்டு தெப்போத்ஸவம் நிறைவு. |
| 28 | 15 | சனி | சது | பர | மாதசதுர்த்தி, கரிநாள். சுக்ரன்-ரிஷபம். |
| 29 | 16 | ஞாயிறு | பஞ் | கார் | கிருத்திகை. லக்ஷ்மி பஞ்சமி, குரு மகரப் பெயர்ச்சி இ.3ம.54நி. பாதிப்பு. |
| 30 | 17 | திங்கள் | சஷ் | ரோகி | சஷ்டி, திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி திருத்தேர். |
| 31 | 18 | செவ் | சப் | மிரு | தனியநாள், திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |





சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்


மலர் 50 **உள்ளுறை** இதழ் 10 பக்கம்


| | |
|---|---|
| **பச்சை தோரணம் : அஷ்ட லக்ஷ்மி** | 7 |
| *- திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.* | |
| **குலசேகர ஆழ்வாரின் இராமபக்தி** | 12 |
| *- எஸ். சுதர்சனம், சென்னை.* | |
| **திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை** | 16 |
| *கலைமாமணி, முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.* | |
| **திவ்விய திருத்தலம்–திருமலை** | 20 |
| *- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.* | |
| **திருக்கச்சி நம்பிகள்** *- திருமதி. பிரேமா வரதன், புதுதில்லி.* | 24 |
| **அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : மனிதப் பிறவியின் மாண்பினை உணர்த்தவே சடங்குகள்** | 31 |
| *- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | |
| **ஸ்ரீமகாலக்ஷ்மி தேவி! கொல்ஹாபூர் நாயகி!!** | 35 |
| *- திருமதி. பா. காயத்ரி, கேரளா.* | |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–வ்ருத்ராசுரன் கதை** | 38 |
| *- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** | 40 |
| *- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | |
| **108 திவ்யதேச வைபவம் – திருப்புல்லாணி** | 42 |
| *- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் – அசுர குணத்தால் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது** | 45 |
| *- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.* | |
| **சிறார் வாக்கு : "பழி" உணர்ச்சியின் பயணம்** | 47 |
| *- செல்வன். ஹ்ருதிக் நாராயண், ஐதராபாத்.* | |
| **ஆயுர்வேதம் – மாமரம்** *- திருமதி. வி. உஷா, திருப்பதி.* | 49 |
| **அன்னமய்யா அருளிய கீர்த்தனைகள்** | 51 |
| *- திரு. எம்.எஸ். விஜய், சென்னை.* | |
| **2020, மார்ச் மாத ராசி பலன்** | 52 |
| *- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.* | |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : **திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம், திருமலை.**

பின்னட்டை : **ஸ்ரீசீதாலக்ஷ்மண உடனுறை ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, திருப்பதி.**



உங்களுடன்...

# பெண்கள் நாட்டின் கண்கள்

*''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்''* அதாவது கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன்னை மணந்து கொண்டவனையும் கற்புத் தவறாதவாறு பேணி, தகுதியமைந்த புகழையும் காத்து, மனையறங்களிலும் தளர்ச்சி இல்லாதவளே (இல்லறத்திற்குச் சிறந்த) பெண் என்று பெண்மைக்கு இலக்கணம் வகுக்கிறார் வள்ளுவர். பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்பதில் இந்தியத் திருநாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது பெண் ஒரு மாபெரும் சக்தியாக இங்கு போற்றப்படுகிறாள். உலகமே சக்தி மயம் அச்சக்தியே ஸ்ரீமூர்த்தியாக சிறப்பித்து மாத்ரு மூர்த்தியாக எண்ணுவது பூஜிப்பது நம் பண்பாடு.

*''யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா''* எங்கு பெண்கள் கௌரவிக்கப்படுகிறார்களோ அங்கு தேவதைகள் ஆனந்தமுடன் அவர்களை ஆசிர்வதிக்கின்றனர். உலகமனைத்தும் ஸ்ரீமூர்த்தியிடமிருந்தே பலவிதமாக உருவெடுக்கிறது. ஸ்ரீ முதல் மாத்ரு மூர்த்தி. அதன்பிறகே உறவு முறையை வைத்து எத்தனையோ பெயர்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆக மணிமாலைக்குள் கயிறு போன்று அனைத்து பெயர்களிலும் உள் உறைந்திருக்கும் சக்தி தாய் வடிவமே. எனவே தான் வேதம் *''மாத்ரு தேவோபவ''* தாயை தெய்வமாக வணங்கு" என்று குறிப்பிடுகிறது. இவ் வேத வாக்கியம் உலகமனைத்திற்கும் ஏற்புடைய தாரக மந்திரம். சிசுவிற்கு முதல் குரு தாய். தாய் தான் குழந் தைக்கு முதன் முதல் இவ்வுலகினை அறிமுகப்படுத்துகின்றாள். பின்பு, தந்தை அக்குழந்தைக்கு உலகைக் குறித்து போதிக்கிறார். இது குறித்தே "தாயைச் சிறந்ததொரு கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்கிறது பழமொழி.

குழந்தையை வளர்ப்பதில் தாய் தந்தையர் இருவருக்கும் பங்கு இருந்தாலும் குடும்ப பொறுப்பை நிர்வகிப்பதில் தாய் தான் மகாராணி. இகபரகுரு தாய்! அந்த தாய்க்கு ஊறு விளைவித்தால் அந்த இனமே இல்லாமல் போய் விடும். இவ்விஷயத்தை குறிப்பாக இன்றைய இளைஞர் சமுதாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. ஸ்ரீயை கௌரவிப்பதே – தேவதையை கௌரவிப்பதாகும்.

இகத்தில் இருப்பது போன்று பரத்திலும் தாய்க்கே முதலிடம் அளித்துள்ளனர் நம் பூர்வர்கள். வைணவத்திலும் எம்பெருமானைக் காட்டிலும் பிராட்டிக்கே முதலிடம். *''அபாங்கபூயாம்ஸோ யதி பரிபரம்ப்ரஹ்ம தத பூதா''* அதாவது பிராட்டியாகிய லக்ஷ்மியின் கடைக்கண் பார்வை எப்பொருள் மீது அதிகமாக விழுந்ததோ அதுவே ப்ரஹ்மமாக ஆனது என்கிறது வேதம். *''ச்ரத்தயா தேவோ தேவத்வ மச்னுதே''* அதாவது பிராட்டியால் பெருமான் பெருமாள் ஆனார் என்கிறது ச்ருதி.

இதுகுறித்தே *''விண்ணவர் அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பிரானே''* என்கிறார் திருமங்கையாழ்வார். அதாவது பிராட்டியைப் பெறுவதற்காகவே வங்கக்கடலைக் கடைந்தான் மாதவன் என்பது இதனால் புலனாகிறது. ஆக பிராட்டியின்றி ஓர் அணுவும் அசையாது என்பர் பெரியோர். புராண, இதிகாச, காவியங்களும் இதையே வலியுறுத்துகின்றன.

ஆக, இம்மாதத்தில் இடம் பெறும் உலக மகளிர் தினத்தில் மகளிரை கௌரவிப்போம்! மகளிரை பாதுகாப்போம்!, இந்து சனாதன தர்மத்தை பேணுவோம்! என்று உறுதி கொள்வோம். அந்த *''அகலகில்லேன் இறைமென்று அலர்மேல் மங்கை உறைமார்பனின்''* இன்னருளுக்கு பாத்திரமாவோம்!!

# அஷ்டலக்ஷ்மி

**ஸ்ரீ:** பதியான ஸ்ரீமந்நாராயணன் *"அகலகில்லேன் இறையுமென்று"* என்று ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரை தம்முடைய திருமார்பிலே நித்யவாசம் செய்வித்தருளி, சேதனர்களின் குற்றங்களின் வீர்யத்தினை குறைக்கும் விதமாக, புருஷகாரபூதையாக, தம்முடனேயே எப்போதும் சேவை சாதிக்கும்படி நியமித்தருளியுள்ளான்.

மகாலக்ஷ்மியான பெரிய பிராட்டியாரின் திருவவதாரம் பெருமாளின் கூர்மவதாரத்திலே நிகழ்கிறது. திருப்பாற்கடலில் அமுதத்தினைபெரும் பொருட்டு, தேவர்களும் அசுரர்களும் கடலை கடைவதற்கு முற்படுகையில், பெருமாள் ஆமை அவதாரம் எடுத்து மந்திர மலையினை தம்முடைய முதுகிலே தாங்கிக் கொள்கிறார். வாசுகி என்கிற பாம்பினைக் கயிறாகக் கொண்டு தேவர்கள் ஒரு பக்கமும், அசுரர்கள் ஒரு பக்கமும் பாம்புக் கயிற்றைப் பற்றிக் கடைந்தனர்.

அனைவரும் அதிசயக்கும் விதமாக விலை மதிப்பற்ற வியத்தகு பொருட்கள் பாற்கடலிலிருந்து எம்பெருமான் கருணையினால் வெளிப்பட்ட வண்ணம் இருந்தன. காமதேனு, வெள்ளைக்குதிரை, சிவப்புமணி, ஐராவதம், பாரிஜாத மரம் போன்ற தெய்வாம்சம் பொருந்திய பொருட்கள் வெளியாகி தேவலோகம் சென்றடைந்தன. வாசுகியின் வாயிலிருந்து வெளிப்பட்ட ஆலகால விஷத்தினை சிவபெருமான் உண்டு திருநீலகண்டரானார். திருப்பாற் கடலிலிருந்து தாமரையில் அமர்ந்த நிலையில் திருமகள் வெளி வந்து, வைகுண்டலோகம் சென்று, திருமாலின் திருமார்பில் ஐக்கியமாகினாள். ஸ்ரீவைஷ்ணவர்களின் இரண்டாவது மந்திரமான "த்வயம்" பிராட்டியினை முன்னிட்டுக் கொண்டே எம்பெருமானின் திருவடிகளில் சரணம் புக வேண்டும் என உபதேசிக்கிறது.

இத்தகைய பெருங்கருணையும், தயவும், இரக்கமும் கொண்டவளுமான திருமகள் புவியில் உள்ள மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் பல்வேறு செயல்களில் தடைகளில்லா வெற்றியினை அருளும் விதமாக எட்டு வடிவங்களில் தோற்றமாகி, மனிதர்களுக்கு பேருதவி செய்தருளுகிறாள். எட்டு வடிவங்களில் காட்சியருளுவதால் அஷ்டலக்ஷ்மி எனவும் கொண்டாடப் பெறுகிறாள். ஆதிலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, தைர்ய லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, வித்யா லக்ஷ்மி, தன லக்ஷ்மி என திருநாமங்கள் உடையவளாய் மாந்தர்களுக்கு வரங்களையும் வாழ்வினையும் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாள். "அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்" எட்டு லக்ஷ்மிகளின் வடிவழகினையும் குணநலன்களையும் துதிக்கிறது.

**ஆதிலக்ஷ்மி :**

*"சுமனச வந்தித சுந்தரி மாதவி சந்த்ர சஹோதரி*
*ஹேமமயே*
*முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயினி*
*மஞ்ஜுளபாஷிணி வேதனுதே |*
*பங்கஜவாசினி தேவஸுபூஜித சத்குண*
*வர்ஷிணி சாந்தியுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி*
*ஆதிலக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

ஆதிலக்ஷ்மியானவள் மிகவும் தேஜஸ் உடையவளாக, முனிவர்கள் புடைசூழ, செந்தாமரை மலரிலே வீற்றிருந்து சேவை சாதித்தருள்கிறாள். சந்திரனின் சகோதரியாய் நான்கு வேதங்களாலும்





துதிக்கப்பட்டு உயர்ந்த முக்தியினை நல்குகிறாள். மதுசூதனனின் தர்ம பத்தினியாய், அனைத்து நற்குணங்களும் வழங்கி, தேவர்களால் வணங்கப்படும் ஆதி லக்ஷ்மி தாயினை அடி பணிந்து நம்மை காத்தருள பிரார்த்தனை செய்வோம்.

பின்னிரு கரங்களில் தாமரை, வெண்கொடி ஏந்தியும், முன்னிரு கரங்களில் அபய வரத முத்திரை தாங்கிய வண்ணம், நான்கு திருக்கரங்களுடன் ஆதி லக்ஷ்மி திருக்காட்சித் தந்தருள்கிறாள். நோய் நொடியற்ற வாழ்வு பெற ஆதி லக்ஷ்மியினை துதி செய்ய வேண்டும்.

**தான்ய லக்ஷ்மி :**

*"அயிகலி கல்மஷ நாஸினி காமினி வைதிக ரூபிணி வேதமயே*
*க்ஷீரச முத்பவ மங்கள ரூபிணி மந்த்ர நிவாஸினி மந்த்ரனுதே |*
*மங்கள தாயினி அம்புஜ வாஸினி தேவகணாச்ரித பாதயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி தான்யலக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

திருப்பாற்கடலை கடையும்போது அவதாரம் செய்தவளான திருமகளின் மற்றொரு வடிவமான தான்ய லக்ஷ்மி வேதங்களின் வடிவாய் திகழ்கிறாள். மங்களங்களை அருளும் மந்திரமாகவும், அம்மந்திரங்களின் உள்ளார்ந்த அர்த்தமாகவும் விளங்கி, தாமரை மலரிலே சேவை சாதித்து, தேவகணங்களுக்கு அடைக்கலம் தந்து இரட்சிக்கிறாள். பாகவதோத்தமர்களின் உள்ளங்களைக் கவர்ந்து கலிதோஷம் நீக்கியருளும் தான்ய லக்ஷ்மியினை வணங்கிடுவோம்.



தான்யலக்ஷ்மி பசுந்துகில் தரித்து எட்டுக் கரங்களுடன் காட்சியருளுகிறாள். நெற்கதிர், கரும்பு, வாழை, தாமரை, தாமரை, கதை இவைகளை ஆறு கரங்களில் தாங்கியும், முன்னிரு கரங்களில் அபயம், வரத ஹஸ்த முத்திரைகளுடன் சேவை தந்து, உலகில் வேளாண்மை வளங்களை பெருக்கி, உயிரினங்கள் அனைத்திற்கும் உணவினைத் தந்தருள்கிறாள்.

**தைர்ய லக்ஷ்மி :**

*"ஜெயவர வர்ணிணி வைஷ்ணவி பார்கவி மந்த்ர ஸ்வரூபிணி மந்த்ரமயே*
*ஸுரகண பூஜித சீக்ரபலப்ரத ஜ்ஞான விகாஸினி ஸாஸ்த்ரனுதே |*
*பவபய ஹாரிணி பாபவிமோஸனி சாதுஜனாச்ரித பாதயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி தைர்ய லக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

ஸ்ரீமந்நாராயணனின் தர்ம பத்தினியாய், மந்திரங்களின் வடிவாய், விளங்கிடும் தைர்ய லக்ஷ்மி வெற்றிகளை வாரி வழங்குகிறாள். ஞானத்தின் வடிவாய் தேவர்களால் வணங்கப்பட்டு நற்பலன்களை விரைந்து அருள்கிறாள். பாபங்களையும் பயங்களையும் போக்கும் அவளின் தாமரைப் பாதங்களை முனிவர்கள் வணங்கி வழிபடுகின்றனர்.



தைர்ய லக்ஷ்மி செவ்வாடை தரித்து, எட்டுக் கரங்களோடு சேவை சாதிக்கின்றாள். சங்கு, சக்கரம், வில், அம்பு, சூலம், கபாலம் இவற்றினை ஆறு கரங்களில் தாங்கியவளாய், முன்னிரு கரங்களில் அபய வரத முத்திரைகளுடன் வீரம், வலிமை, துணிவு இவற்றினை அருளி வெற்றிக்குத் தேவையான தைர்யத்தினையும், மனத்திண்மையினையும் அருள்கிறாள்.

**கஜ லக்ஷ்மி :**



*"ஜெய ஜெய துர்கதி நாஸினி காமினி ஸர்வ பலப்ரத ஸாஸ்த்ரமயே*
*ரதகஜ துரகபதாதி ஸமாவ்ருத பரிஜன மண்டித லோகனுதே |*
*ஹரிஹர பிரம்ம ஸுபூஜித சேவித தாப நிவாரணி பாதயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி கஜலக்ஷ்மி ரூபேண பாலயமாம் ||".*

தீமைகள் விளைந்திடும் பாதைகளை மாற்றி, அனைத்து நன்மையான பலன்களை அருளும் கஜலக்ஷ்மி சாத்திரங்களின் வடிவாகவே திகழ்கிறாள். ரதகஜ துரக சேனைகள் சூழ, அண்டசராசர உயிர்கள் அனைத்தும் அவளினைப் பணிகின்றன. மும்மூர்த்திகளும் அவளின் தாமரைத் திருப்பாதங்களை பணிந்து தங்களின் தாபங்கள் நீக்கப் பெருகின்றனர்.

இருபுறமும் யானைகள் புனித நீரினை சொரிந்த வண்ணம் நான்கு திருக்கரங்களுடன் காட்சியருளும் கஜ லக்ஷ்மியின் பின்னிருகைகள் தாமரை மலர்களை ஏந்திய வண்ணமும், முன்னிருகைகள் வரத அபய முத்திரைகளுடன் அருளிய வண்ணம் உள்ளன. விவசாயம் பெருகி, நாடு செழிக்கவும், அரசனுக்கு நிகரான பெருஞ்செல்வம் கிடைத்திடவும் கஜ லக்ஷ்மியினை துதி செய்ய வேண்டும்.

**சந்தான லக்ஷ்மி :**



*"அயிகஹ வாஹினி மோஹினி சக்ரிணி ராகவி வர்த்தினி ஞானமயே*
*குணகண வாரிதி லோக ஹிதைஷினி ஸ்வரசப்த பூஷித கானனுதே |*
*சகல சுராசுர தேவ முனீச்வர மானவ வந்தித பாதயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி சந்தானலக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

ஞானத்தின் வடிவிலளான சந்தான லக்ஷ்மி திருக்கையில் சக்கரம் தாங்கி, கருட வாகனத்தில் வலம் வருகிறாள். அனைத்து திருக்கல்யாண குணங்களையும் தன்னகத்தே கொண்டு உலகத்திற்கு நல்லனவற்றை அருளும் அவளினை ஏழு ஸ்வரங்களும் இன்னிசையால் பூஜிக்கின்றன. சகல தேவர்களும், அசுரர்களும், முனிகணங்களும், மனிதர்களும் அவளின் பாதங்களைப் பணிகின்றனர்.

மாந்தருக்கு மக்கட்பேறு தந்தருளும் சந்தான லக்ஷ்மி, ஆறு திருக்கரங்களுடன் காட்சியருளுகிறாள். நான்கு கைகளில் கலசம், கலசம், கத்தி, கேடயம் தாங்கியும், மற்ற இரு கரங்களில் அபய வரத முத்திரைகளுடன், மடியில் குழந்தையுடன் அருள் பாலிக்கிறாள்.

**விஜய லக்ஷ்மி :**



*"ஜெய கமலாசனி ஸத்கதி தாயினி ஞான விகாஸினி கானமயே*
*அனுதின மர்ச்சித குங்கும தூசர பூஷித வாஸித வாத்யனுதே |*
*கனக தராஸ்துதி வைபவ வந்தித சங்கர தேசிக மான்யபதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி விஜயலக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

தாமரையில் வீற்றிருக்கும் விஜயலக்ஷ்மி அஞ்ஞானத்தினை நீக்கி, ஸ்ரீவைகுந்த வாழ்வினுக்கான அர்ச்சிராதி மார்க்கத்தினை காட்டியருளும் நாதஸ்வரூபிணியாய் சேவை சாதிக்கிறாள். மங்கள வாத்தியங்கள் முழங்க அனுதினமும் குங்குமத்தாலே அர்ச்சனை செய்யப்பட்டு மந்திரங்களாலே



துதிக்கப்படுகிறாள். ஆதிசங்கரர் மிகவும் பக்தியுடன் செய்த கனகதாரா ஸ்துதியாலும், வேதாந்த தேசிகர் செய்த ஸ்ரீஸ்துதியாலும் மகிழ்ந்து பொற்காசுகளை மழையென பெய்வித்த மதுசூதனனின் பத்தினியான விஜய லக்ஷ்மியினை வணங்கிடுவோம்.

விஜயலக்ஷ்மி எட்டு திருக்கரங்களுடன் சங்கு, சக்கரம், பாசம், கத்தி, கேடயம், தாமரை தாங்கி, அபய வரத முத்திரைகளுடன் சேவை சாதிக்கின்றாள். அனைத்து காரியங்களிலும் வெற்றி பெறுவதற்கு விஜயலக்ஷ்மியினை துதி செய்ய வேண்டும்.

**வித்யா லக்ஷ்மி :**

*"ப்ரணத ஸுரேச்வரி பாரதி பார்*
*கவி சோக வினாசினி ரத்னமயே*
*மணிமய பூஷித கர்ண விபூஷண*
*சாந்திஸமாவ்ருத ஹாஸ்யமுகே |*
*நவநிதி தாயினி கலிமல ஹாரிணி*
*காமித பலப்ரத ஹஸ்தயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன காமினி*
*வித்யாலக்ஷ்மி சதா பாலயமாம் ||".*

பிருகு முனிவரின் புதல்வியான வித்யாலக்ஷ்மி ரத்னமயமாய் ஒளி வீசி சோகங்களைப் போக்கியருள்கிறாள். நவமணி ஆபரணங்கள் ஒளி வீசிட, செவிகளில் தாடகம் தாங்கி, சாந்தத்தின் வடிவமாய் மந்தஹாச புன்னகையுடன் அருள்பாளிக்கிறாள். கலி காலத்தின் தோஷங்களை விரட்டி, நவ நிதிகளையும் சொரிந்த வண்ணம் அபய வரத ஹஸ்தங்களோடு சேவை சாதிக்கும் பெருமாளின் பத்தினியினை வணங்கிடுவோம்.

வித்யாலக்ஷ்மி நான்கு திருக்கரங்களுடன் வெண்பட்டாடையோடு, முன்னிருக்கைகளில் தாமரைகளை ஏந்திய வண்ணம் அபய வரத முத்திரைகளுடன் சகல கலைகளையும் பிரார்த்தனை செய்யும் அடியவர்களுக்கு அருளிய வண்ணம் திகழ்கிறாள்.



**தன லக்ஷ்மி :**

*"திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி*
*துந்துபிநாத ஸுபூர்ணமயே*
*குமகும குங்கும கும்கும குங்கும*
*ஸங்கனி நாதஸு வாத்யனுதே |*
*வேதபுரணே திஹாச ஸுபூஜித*
*வைதிக மார்க பிரதார்சயுதே*
*ஜெயஜெய ஹே மதுசூதன*
*காமினி தனலக்ஷ்மி ரூபேண*
*பாலயமாம் ||".*

தனலக்ஷ்மியானவள் "திமிதிமி திந்திமி" என துந்துபி நாதம் முழங்கிடவும், "குமகும குங்கும" என சங்கத்தின் நாதம் தெறித்திடவும், பரிபூரணமான தேஜசுடன் ஒளிவீசுகிறாள். வேதங்களும், புராணங்களும் இதிகாசங்களும் வணங்கி வழிபட, வைதீக மார்க்கத்தினை பாகவதோத்தமர்களுக்கு பிரசாதித்தருளும் எம்பெருமானின் தர்ம பத்தினியான தனலக்ஷ்மியினை துதித்துடுவோம்.

தனலக்ஷ்மி ஆறு திருக்கரங்களுடன் சங்கு, சக்கரம், கலசம், வில் அம்பு, தாமரை ஏந்திய வண்ணம் அபய ஹஸ்தத்துடன் காட்சியருளி தனவளமும், பொன்வளமும் பெருக்கியருள்கிறாள்.

**ஓம் மஹாதேவ்யை வித்மஹே**
**விஷ்ணுபத்ந்யைஸ தீமஹி**
**தந்நோ லக்ஷ்மி ப்ரசோதயாத்**

திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி,
94438 79592



# தி.தி.தே. ஆலய தரிசனம் (பாக்கேஜ் டூர்)



## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.100/–<br>ஏ.சி. –ரூ.150/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 6 (ஆறு) | காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

#### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் - திருச்சானூர்
2. ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - தொண்டவாடா
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - ஸ்ரீநிவாசமங்காபுரம்
4. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி
5. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.250/–<br>ஏ.சி. –ரூ.350/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 2 (இரண்டு) | காலை 8 மணிக்கு மற்றும் காலை 9 மணிக்கு |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

#### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் - கார்வேடி நகரம்
2. ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில் - நாகலாபுரம்
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - நாராயணவனம்
4. ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - அப்பளாயகுண்ட்டா
5. ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில் - நகரி
6. ஸ்ரீஅன்னபூர்ணி உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - புக்கை
7. ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - சுருட்டப்பள்ளி

**மேலும் விவரங்களுக்கு**

**0877-2289123, 2289120 / 121, 9848007033**

*"அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும்*
*அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி*
*வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி*
*விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னை..."*

(பெருமாள் திருமொழி 10.1) என்று சக்ரவர்த்தித்திருமகன் ஸ்ரீராமனின் கதையைக் கேட்பதில் அளவற்ற ஈடுபாடு உள்ளவராகத் திகழ்ந்தார் குலசேகர ஆழ்வார். மன்னர் வம்சத்தில் தோன்றியவரானாலும், பக்திப் பரவசமடைந்து, உணர்ச்சிவசப்பட்டு, தன்னையே மெய்மறந்து ஸ்ரீராம கதையைக் கேட்பார்.

*"எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்*
*பருகுவோம் இன்னமுதம் மதியோமன்றே"*

பெருமாள் திருமொழி 10.8




செவிகளால் கேட்டும், கண்களால் கண்டும் அநுபவிப்போம். இனிய தேவாம்ருதம் கிடைத்தாலும் அதை ஒரு பொருளாக மதிக்காது ஸ்ரீராம சரித்திரம் அனுபவிப்போம் என்கிறார். ஆரண்ய காண்டத்தில் ஒரு நிகழ்ச்சி, இரக்கமில்லா ராக்ஷஸர்கள் கரண், தூடணன், திரிசிரன் பல அரக்கர்களுடன் கூடி, ஸ்ரீராமனுடன் போர் புரிய வந்தனர். துஷ்டர்கள் ஸ்ரீராமனைச் சுற்றிச் சூழ்ந்தனர். பல்வேறு ஆயுதங்களால் ஸ்ரீராமரை தாக்கினர்.

ஸ்ரீராமன் தனியே நின்று அவர்களை எதிர்த்தான். யாளிகள், சிங்கங்கள், புலிகள், கரடிகள், பன்றிகள் பூட்டப்பட்ட அதிவேகத்துடன் செல்லும் தேர்ப்படைகள் திரண்டு வந்து, ஸ்ரீராமனைத் தாக்கின. இதைக்கேட்டது தான் தாமதம். குலசேகர மன்னர் இதெல்லாம் தன் கண்ணெதிரே நடப்பதாக நினைத்து, ஸ்ரீராமனுக்கு உதவி செய்யத் தம் படைகளைத் திரட்டினார். தாமும் தேர் ஏறிச் சென்று ஸ்ரீராமனுக்கு உதவ ஆயத்தமானார். ஸ்ரீராமனிடத்திலுள்ள பக்திப் ப்ரீதியால் இராமாயண காலத்துக்கே சென்று, தற்போதைய சூழ்நிலையை மறந்து, இராமாயணத்தோடு ஒன்றி விட்டார் என்றுணர்ந்து பௌராணிகர் புராணம் சொல்பவர் – உடனே "ஸ்ரீராமர் வென்றார்", "வெற்றியுடன் வந்த ஸ்ரீராமனை சீதாப்பிராட்டி வரவேற்று அணைத்து கௌரவித்தாள்" என்று கதறினார்.

குலசேகர மன்னர் அடைந்த இன்பத்திற்கு அளவேயில்லையாம். தன் படைவீரர்களைத் திருப்பி அனுப்பியதோடு, தான் தன் பயணத்தை நிறுத்தினார். ஆழ்வாரின் பாசுரமே இவருக்கு ஸ்ரீராமனின் மேலிருந்த கருணையைக் காண்பிக்கின்றது. (பெருமாள் திருமொழி 10.3)

*"செவ்வரி நற் கருநெடுங்கண் சீதைக்காகிச்*
*சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி*
*வெவ்வரி நற் சிலை வாங்கி வென்றி கொண்டு*
*வேல் வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை..."*

# குலசேகர ஆழ்வாரின் இராம பக்தி



சேர மன்னர் திடவிரதனின் திருக்குமாரராக அவதரித்தவர் குலசேகரர். மாசி மாதம் வளர்பிறையில், துவாதசி திதியில், வெள்ளிக்கிழமை புனர் பூச நட்சத்திரத்தில் பகவான் ஸ்ரீமந் நாராயணனின் திருமார்பில் ஒளி வீசும் கௌஸ்துப மணியின் அம்சமாய் அவதரித்தவர். தன் தந்தைக்குப் பின் முடி சூடி செங்கோலாட்சி புரிந்து வந்தார். சோழ பாண்டிய அரசர்களை வென்று, அவர்கள் ஆட்சியையும் தன் குடைக்கீழ் கொண்டு வந்து சக்ரவர்த்தித் திருமகனாய் கீர்த்தியோடு திகழ்ந்தார்.

*''கொல்லி காவலன் கூடல் நாயகன்*
*கோழிக்கோன் குலசேகரன்''*

கூடல் நாயகன் என்பது மதுரையை வென்றதைக் குறிப்பிடுகிறது. கோழிக்கோன் என்பது திருக்கோழி என்றழைக்கப்பட்ட உறையூரைத் தலைநகரமாகக் கொண்ட சோழனை வென்றதைக் குறிக்கும்.

*''கூரார்ந்த வேல் வலவன் கோழியர் கோன்*
*குடைக்குலசேகரன்''*

இங்கே குலசேகரன் என்பது சோழ பாண்டிய அரசர்களை வென்று, தன் குடைக்கீழ் கொண்டு வந்ததைக் குறிக்கும். "சேரன் குல சேகரன் முடிவேந்தர் சிகாமணி" என்றல்லவோ அழைக்கப்பட்டார். இதை அறிந்த பாண்டிய மன்னன் தன் புதல்வியைக் குலசேகரனுக்குத் திருமணம் செய்து வைத்தான். வீரப்போர் செய்வதில் ஊக்கம் உடையவர், இல்லற வாழ்க்கையை விரும்பி வாழ்ந்தவர். திருப்பாற்கடலில் எழுந்தருளிய பரந்தாமனிடம் தன் மனதைப் பறி கொடுத்தார்.

**திருமால் விளையாடும் திருவிளையாடல் :**

குலசேகரரைக் கொண்டு ஜீவாத்மாக்களை நல்வழிப்படுத்த நினைத்த ஸ்ரீமந்நாராயணனின் திருவிளையாடலால் அரசியலில் நாட்டம் குறைந்தது. ஆன்மீக ஈடம் பெருக்கெடுத்தது. அகப்பற்றும் புறப்பற்றும் புறக்கணிக்கப்பட்டது. உலகப் பற்று அழிந்தது. நான் எனது என்னும் அகங்காரம் மமகாரம் அற்பமானவை என்றுணர்ந்த குலசேகரர் துயரறு சுடரடியான ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளைத் தொழுது எழ விரும்பினார். அதுவே பேரின்பம் என்றுணர்ந்தார். இந்த மன நிலையில் தான் குலசேகரர் இறைவனது புராணங்களைக் கேட்க விருப்பம் கொண்டார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

மற்றொரு இராமாயண சொற்பொழிவு. இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற இடம். சீதைப்பிராட்டி ஜகன்மாதா என்று உணராமல், அவள் மீது காதல் கொண்டு, அவளைத் தூக்கிச் சென் றானே அந்த இடம். கேட்டது தான் தாமதம். படையைத் திரட்டினார். படையோடு கடலில் இறங்கினார். சீதையை மீட்பேன் என்று சூளுரைத்தார்.

இவரது அன்பு கண்டு ஆச்சரியமடைந்த இராமபிரான் குலசேகரன் முன் தோன்றினார். சீதாப் பிராட்டியோடும் இளைய சகோதரன் லக்ஷ்மணனோடும் காட்சியளித்தான். ஸ்ரீராமனே குலசேகரரிடம் பேசுகிறான். "அரக்கனை வென்றோம். சீதையை மீட்டோம். கவலையை விடு" என்றானாம். பெருமாளையே நேரில் கண்டவர் தன் அரண்மனைக்குள் ஸ்ரீராமனுக்கு ஒரு ஆலயம் அமைத்து, தினந்தோறும் இராமபட்டாபிஷேகத் திருக்கோலம் கண்டு மகிழ்வான்.

*''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்''* என்பதற்கேட்ப தினமும் இராம நாம சங்கீர்த்தனம். *''ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே! சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வராநநே!!''* என்று இராமபஜனை நடக்கும். பாகவதர்களுக்கு

அன்னமிட்டு மகிழ்வார். ஆன்மீகம் குலசேகரரின் மன தில் குடி கொண்டு வளர்ந்தது. இராஜகாரியங்களை மறக்க ஆரம்பித்தார்.

*''மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்*
*இவ்வையம் தன்னொடும் கூடுவதில்லை யான்''*

நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கையை நிலை யானது என்று நினைப்பவர்களோடு எனக்கு எந்தவித உறவும் இல்லை என்று பறை சாற்றுகிறார்.


*''உண்டியே உடையே உகந்தோடும்*
*இம் மண்டலத்தொடும் கூடுவதில்லை யான்''*

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நினைப்பதற் கும் வணங்குவதற்கும், அவன் புகழ் பாடுவதற்கும் சரீரம் ஏற்படுத்தப்பட்டது. இந்த உடல் அழியும், இந்த உடலைப் பாதுகாக்க உணவு உடைகள். இதற்காக அளவிற்கும் மீறி செலவிடுவது வீண் என்கிறார். உணவையும் உடை களையும் மட்டுமே விரும்பித் திரிபவர்களுடன் நான் கூடுவதில்லை என்கிறார்.

''வானாளும் செல்வமும் மன்னரசும் யான் வேண்டேன்''
''இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்''

என்றெல்லாம் பாடுகிறார். முழு முதற் கடவுள், பரம்பொருள் யார் என்ற ஆராய்ச்சியில், ஸ்ரீமந்நாராய ணனே உயர்வற உயர்ந்தவன், உயர் நலமுடையவன் என்றுணர்ந்த குலசேகரர், ஸ்ரீவைஷ்ணவ அடியார் களுடன் சேர ஆரம்பித்ததிலிருந்து பக்தி மார்க்கத்தில் சென்று திருமாலிடம் சரணடைந்தார். இவரை இப்பக்தர்களிடமிருந்து விலக்கினால், மீண்டும் குல சேகரரை உலக விஷயங்களில் பற்று ஏற்படும்படிச் செய்யலாம் என்று சில அமைச்சர்களும், ஆலோசர்க ளும், முக்கிய பிரஜைகளும் நினைத்தனர். சில திட்டங் களை வகுத்தனர். அரண்மனையில் இராமபிரானின் ஆலயத்திலிருந்த விலையுயர்ந்த நவமணி மாலையை மறைத்தனர். திருடு போனது என்று கதறினர். ஸ்ரீவைஷ் ணவர்களே கலவாடினர் என்று வீண் பழியைச் சுமத் தினர். துடிதுடித்துப் போனார் குலசேகரர். ஸ்ரீராமனிடம் சரணடைந்தார். இராமன் வழிகாட்டுகிறான்.





ஒரு குடத்தில் விஷப்பாம்புகள் – நல்ல பாம்பு களையிட்டார். தன் கையைக் குடத்திற்குள் விட்டார். அடியார்கள் நவமணி மாலையைத் திருடியிருந்தால் விஷப்பாம்புகள் என்னை கடிக்கட்டும் என்றார். சதி செய்த அமைச்சர்கள் நடுங்கிப் போனார்கள். நெடு நேரம் தியானத்தில் அமர்ந்திருந்தார் குலசேகரர். அவ்விஷப் பாம்புகள் குடத்திலிருந்து வெளியே வந்து, குலசேகரரை வலம் வந்து வணங்கிச் சென்றன. மணக்கால் நம்பி என்னும் ஸ்ரீவைணவப் பெரியார் இந்நிகழ்ச்சியைப் பாசுரப்படுத்துகிறார்.

*''ஆரம் கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே*
*வாரங் கொடு குடப்பாம்பில் கையிட்டவன் - மாற்றலரை*
*வீரங்கெடுத்த செங்கோல் கொல்லிகாவலன் வில்லவர் கோன்*
*சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே''*

**தி.தி.தே. குறித்த தகவல்கள் அறிவதற்கு, திருப்பதியில் இரயில் நிலையம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட், ரேணிகுண்ட்டா இரயில் நிலையம் மற்றும் விமான நிலையம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தி.தி.தே. தகவல் மையங்களை அணுகுங்கள்.**

அமைச்சர்களும் ஆலோசகர்களும் மன்னிப்புக் கேட்க, குலசேகரர் இராஜ்ய பாரத்தில் வெறுப் படைந்து, மன்னவர் பதவியைத் துறந்து, தன் திருக் குமாரனுக்கு முடிசூட்டித் துறவறம் பூண்டார். குல சேகர மன்னர் குலசேகர ஆழ்வார் என்று கௌர விக்கப்பட்டார். இராமபிரான் ஆராதித்த திருவரங் கனைக் காண மனம் துடிக்கவே, அரங்கன் பெருமை யையும் திருஅரங்கத்தின் பெருமையையும் குல சேகர ஆழ்வார் பாடின அழகே அழகு.

*''கரு மணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, என்*
*கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே?''*

*''என் வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே''*

*''அங்கு அடியவரோடு என்று கொலோ அணுகும் நாளே?''*

*''என் உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே''*

*''மாயோனைக் கண்டு என் கண்கள் நீர்மல்க*
*என்று கொலோ நிற்கும் நாளே?''*

பெருமாள் ஸ்ரீராமன் ஆராதித்த பெரிய பெரு மாள் திருவரங்கனிடம் குலசேகர ஆழ்வாருக்கிருந்த பக்தியைக் கண்டு மகிழ்ந்த பெரியோர் இவரை குலசேகரப் பெருமாள் என்றழைத்தனர். குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த பிரபந்தம் பெருமாள் திருமொழி என்று அழைக்கப்படுகிறது.

இராமாயணத்தைப் பத்தே பாசுரங்களில் விவ ரித்துப் பாடும் "திருச்சித்திரக் கூடப்பதிகம்" இராமா யணத்தை முழுமையாகக் கற்ற இன்பம் பயக்கும். ஸ்ரீராமனின் துயரைத் தாங்க மாட்டாத தசரதனின் மன நிலை அழகாக நம் கண் முன் சித்தரிக்கப் பட்டுள்ளது. திருக்கண்ணபுரத்து மங்களாசாசனப் பாசுரங்களில் ஸ்ரீராமனுக்குத் தாலாட்டுப் பாடியிருப்பது இனிமையாக இருப்பதோடு, நாமும் நம் வீட்டில் தாலாட்டுப் பாட உதவுகிறது. குழந்தைகள் ஸ்ரீராமனின் அருள் பெற்று வாழ வழி அமைத்துக் கொடுப்பது போல் தோன்றுகிறது. நம் குலம் சிறப்போடு வாழவும் உதவி செய்கிறது.

பாசுரங்களில் உள்ள தீஞ்சுவை, தெளிந்த நடை, ஆழ்ந்த கருத்துக்கள், சிறந்த உவமானங்கள், சேர நாட்டு மரபுகள், பக்தி உணர்வு, பாகவதர்களுக்கு மரியாதை போன்ற உயர்ந்த கருத்துக்களை நாமும் அனுபவித்து உய்வோம் வாருங்கள்.

**எஸ். சுதர்சனம், சென்னை, 99627 88065**

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

**(MONTHLY)**
**FORM IV**

*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Honorary Editor | : | **Sri. Anil Kumar Singhal,** I.A.S., Executive Officer, TTD |
| 4. Printer's Name | : | **Sri. R.V. Vijaya Kumar,** B.A., B.Ed. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Dy. E.O., (Publication & Press), T.T.D., Tirupati. |
| 5. Editor & Publisher's Name | : | **Dr. K. Radha Ramana,** M.A.,M.Phil., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor, Sapthagiri T.T.D. Journal, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Board of Trustees represented by the Executive Officer on behalf of T.T.D., Tirupati |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 29-2-2020

**(Sd.) Dr. K. Radha Ramana**
*Signature of the Publisher*


வைணவ அடியார்

# திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை



கலைமாமணி, முனைவர்
இரா.வ. கமலக்கண்ணன்,
காஞ்சிபுரம், 9976366781

சென்ற இதழ் தொடர்ச்சி...



திருமங்கையாழ்வார் பல திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்யும் போதும் இடையில் திருமலை நினைவு வந்தவராய் மங்களாசாசனம் செய்கிறார். அவற்றை காண்போம். திருநாங்கூர் நடுவிலுள்ள திருச்செம்பொன் கோயிலை மங்களாசாசனம் செய்யுமிடத்து,

*“ மின் திகழ் குடுமி வேங்கடமலை மேல் மேவிய வேத நல்விளக்கை”* – 4:3:8

என்று பாடுகிறார். “ஒளி வீசும் சிகரத்தை உடைய திருமலையின் மேல் பொருந்தி இருப்பவன், வேதங்களால் காணக்கூடிய நல்ல விளக்காக விளங்குகிறான்.

### திருநாங்கூர் – திருவெள்ளக்குளம் :

*“வேடார் திருவேங்கடம் மேய விளக்கே!”* – 4:7:5

“வேடர்கள் மலிந்திருக்கிற திருமலையில் நித்திய வாசம் செய்கிற விளக்குப் போன்றவன்”. எம்பெருமானை விளக்கு என்பது சொரூப, ரூப குணங்களைத் தானே விளக்கிக் கொண்டிருப்பதால் என்க.

### திருவெள்ளறை :

*“வாம்பரியுக மன்னர்தம் உயிர்செக ஐவர்கட்கு அரசளித்த*
*காம்பினார் திருவேங்கடப் பொருப்ப!”* – 5:3:4

பாரதப் போரில் தாவிவரும் குதிரைகள் அழியும்படியாகவும், பகையரசர் அழியும் படியாகவும் செய்து பஞ்சவர்க்கு அரசைக் கொடுத்தருளியவன்.

**திருவரங்கம் :**

*"வெருவாதாள் வாய் வெருவி வெங்கடமே!*
*வேங்கடமே! என்கின்றாளால்"*

– 5:5:1

(என் பெண் பிள்ளையானவள்) யார்க்கும் அஞ்சாதவளாய், தன்னை அறியாமல் பிதற்றும் போதும், "வேங்கடமே! வேங்கடமே!!" என்கிறாள்.

அழகிய மணவாளன் மீது அன்பு செல்ல, திருமலை பற்றி இங்குக் குறிப்பிடக் காரணம் இல்லையே – எனின், பரமபதமே – திருவரங்கமாகவும், அங்குள்ள விரஜா நதியே இங்குள்ள திருக்காவேரியாகவும், பரவாசுதேவனே – ஸ்ரீரங்க நாதனாகவும் அவதரித்ததாக முன்னோர் கூறுவர். பரமபத நாதன் திருவரங்கத்தில் வந்து சேருவதற்காக அங்கிருந்து எழுந்தருளுமளவில் இளைப்பாறத் திருமலையிலே சிறிது நேரம் நின்று, பின்பு திருவரங்கத்திலே வந்து சாய்ந்தருளினான் என்பர்.

அமலனாதிபிரான் – முதல் பாசுரத்தில் *"விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்"* என்றார். எனவே, இப்போது திருவரங்கத்தில் ஆழ்வாருக்கு உண்டான ஆவல், அதற்கு மூலமான திருமலை அளவும் சென்றதால், "வேங்கடமே! வேங்கடமே!" என்று கூறுகிறார்.

*"சிந்தனையைத் தவநெறியைத் திருமாலை பிரியாது*
*வந்து என் மனத்திருந்த வடமலையை..."*

– 5:6:7

என் மனத்திற்கு இலக்கானவனும், நல்வழிக்கு உபாயமாய் இருப்பவனும், திருமகள் கொழுநனும், திருமலைக்குத் தலைவனும் (அவ்விடத்தை விட்டு) எழுந்தருளி என்னுடைய நெஞ்சிலே ஒரு நொடிப் பொழுதும் விட்டுப் பிரியாமல் எழுந்தருளியிருக்கிறான்.

**திருநறையூர் :**

நறையூர் நம்பி இவருக்குப் பல திவ்விய தேச மூர்த்திகளாகச் சேவை சாதித்தது பற்றி இத்திருமொழியில் பாடுகிறார்.

*"தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தான்"*

– 6:8:1

தேனை உடைய மலைகளை உடைய திருமலையில் எழுந்தருளியிருப்பவன்.

*"உம்பர்க்கணியாய் நின்ற வேங்கடத்து அரி"*

– 7:3:5

மேல் உலகிலுள்ள அமரர்களுக்கெல்லாம் அலங்காரமாய் இருக்கும் திருமலை.

**திருக்கண்ணமங்கை :**

*"வட மாமலை உச்சியை"* – 7:10:3

வடவேங்கட மலையின் சிகரமாய் இருப்பவன், வட திருவேங்கட மலையின் உச்சியை இருப்பிடமாக உடையவனைத் திருக்கண்ணமங்கையில் கண்டு கொண்டேன்.

**திருக்கண்ணபுரம் :**

*"அருவிசோர் வேங்கடம் நீர்மலை என்று வாய்*
*வெருவினாள்"*

– 8:2:3

தலைவியின் நிலைகண்டதாய் தலைமகளது நிலை கண்டு வருந்திக் கூறும் பாசுரம். இப்பரகால நாயகியானவள் அருவிகள் சொரிகின்ற திருமலையென்றும்... திருக்கண்ணபுரம் என்றும் வாயால் சொன்ன அளவில் நிர்ப்பண்டமானாள்.

**திருவல்லவாழ் :**

மலைநாட்டுத் திருப்பதிகள் மொத்தம் 13. அவற்றுள் இவர் திருவல்லவாழ், திருமூழிக்களம், திருநாவாய் என்ற மூன்றையும் மங்களாசாசனம் செய்துள்ளார்.

*"விண்ணுளார் விண்ணின் மீதியன்ற வேங்கடத்துளார்*
*வளங்கொள்முந்நீர்*
*வண்ணனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய்*
*மருவு நெஞ்சே!"*

– 9:7:4

நித்திய சூரிகளுக்காகப் பரமபதத்தில் காட்சி கொடுத்துக் கொண்டு இருப்பவரும், திருமலையில் எழுந்தருளியிருப்பவரும், கடல் போன்ற வடிவை உடையவருமான பெருமாளுடைய வல்லவாழ் என்கிற திருப்பதியை வாயாற் சொல்வதைக் காட்டிலும் நெஞ்சாலே பொருந்துவாயாக.

**திருமாலிருஞ்சோலை :**

*"வலம்புரி ஆழியனை வரையார் திரள் தோளன்*
*தன்னை*
*புலம்புரி நூலவனைப் பொழில் வேங்கட வேதியனை*
*சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலை நின்ற*
*நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்? என்*
*நன்னுதலே*" –9:9:9

சங்கு சக்கரம் உடையவனும், மலை போன்று திரண்ட திருத்தோள்களை உடையவனும், பூணூல் அணிந்தவனும், சோலை சூழ்ந்த திருமலையில் உள்ளவனும், வேதத்தால் துதிக்கப்படுபவனும், சிலம்பாறு எனும் நூபுரகங்கையை உடைய அழகர் மலையில் நிற்பவனும், திருக்கல்யாண குணங்கள் விளங்கப் பெற்றவனுமான எம்பெருமானை என் மகள் அடையப் பெறுவாளோ?

திருமால் உலகளந்தபோது மேலே சத்திய லோகம் சென்ற அப்பெருமானது திருவடியை பிரம்மன் தன் கமண்டல தீர்த்தத்தால் கழுவி விளக்க, அக்காற் சிலம்பினின்று தோன்றியதால் சிலம்பாறு எனப்பட்டது.

**பலதிவ்விய தேசங்கள் :**

*"பொன்னை மாமணியை அணியார்ந்த தோர்*
*மின்னை வேங்கடத்து உச்சியில் கண்டு போய்*
*என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்*
*தன்னை யாம் சென்று காண்டும் தண் காவிலே"*

– 10:1:2

பொன், நீலமணி போன்றவனும், மின்னல் போன்று ஒளி பொருந்தியவனும், என்னை அடிமை கொண்ட சுவாமியுமான பெருமானை, அடியோம் திருமலையின் சிகரத்திலே வணங்கி, திருத்தண்காவிலே இன்று சென்று வணங்குவோம். இது சுவாமி தேசிகன் அவதாரத்தலம்.

**தலைவனைப் பிரிந்த தலைமகள் ஆற்றாது கூறிய பாசுரம் (வெண்டுறை) :**

*"சொல்லாய் பைங்கிளியே!*
*சுடராழி வலனுயர்த்த*
*மல்லார் தோள் வடவேங்கடவனை வர*
*சொல்லாய் பைங்கிளியே!"*

– 10:10:5

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

"கிளியே! ஒளிமிக்க திருவாழிப்படையை வலத் திருக்கையிலே உயரத் தூக்கி உள்ளவனும், மிடுக்குடைய திருத்தோள்களை உடையவனும், வடவேங்கடத்தில் எழுந்தருளி இருப்பவனுமான பெருமானை இங்கு வரச் சொல்ல வேண்டும்.

**தலைவி இரங்கிக் கூறிய பாசுரம் :**

*"கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் கை வளைகள்*
*என்னோ கழன்ற? இவை என்ன மாயங்கள்?*
*பெண்ணானோம் பெண்மையோம் நிற்க அவன் மேய*
*அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே."*

– 11:3:7

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும், கைவளை கழலப் பெறுகின்ற நமக்கும் பெண்மைக்கும் வெகு தூரமுண்டு என்றபடி, கை வளைகள் கழன்றாலும் கழலட்டும்; பெண்மைக்குக் கேடு வந்தாலும் வரட்டும், அவன் விரும்பி உறையும் திருமலையையும், திருவரங்கத்தையும் பாடுவோம் என்கிறாள்.

இருதோழியர் எம்பெருமானது சௌலப்பியத்தையும் பரத்துவத்தையும் எதிர் எதிராகக் கூறுதல் – இது சாழல் என முடியும்.

பெருமானின் திருக்கல்யாண குணங்களில் மேன்மையும் (பரத்துவம்), எளிமையும் (சௌலப்பியம்) குறிப்பிடத்தக்கன. இவ்விரண்டையும் இரு பெண்களின் நிலையை அடைந்து ஏசிப் பேசுகிற ஒருத்தியின் பாசுரத்தால் எளிமைக் குணத்தையும், ஏத்திப் பேசுகிற மற்றொருத்தியின் பாசுரத்தால் மேன்மைக் குணத்தையும் அனுபவிக்கிறாராய்ச் செல்லுகிறது இத்திருமொழி.

*"கள்ளத்தால் மாவலியை மூவடி மண்*
*கொண்டளந்தான்*
*வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ!*
*வெள்ளத்தான் வேங்கடத்தானேலும் கலிகன்றி*
*உள்ளத்தினுள்ளே உளன் கண்டாய் சாழலே"*

– 11:5:10

"தோழீ! கபட வேடத்தால் மாவலியிடம் 3 அடி மண்ணை இரந்து பெற்று அளந்து கொண்டவன், (ஒருவர்க்கும் எளியனாகாதபடி) திருப்பாற்கடலிலே உள்ளான். திருமலையில் உள்ளான் என்று சொல்கிறார்கள் அன்றோ? தோழி! பாற்கடலிலும் திருமலை

77

## சாஸ்த்திர நீதிகள்



ச்லோகார்த்தேண ப்ரவக்ஷ்யாமி

யதுக்தம் க்ரந்த கோடித: |

பரோப கார: புண்யாய

பாபாய பர பீடிணம் ||

கோடிக்கணக்கில் உள்ள கிரந்த புஸ்த்தகங்களில் கூறப்பட்டுள்ள உண்மை, புண்ணியம் செய்து நல்கதி அடைவதே ஆகும். பிறர்க்கு உபகாரம் செய்தாலே புண்ணியம் வந்து சேரும். அடுத்தவர்களது கஷ்ட, நஷ்டங்களை கண்டு உதவி செய்யாமையாலே பாபம் வந்து சேரும். யாரையாவது இழிச்சொல் கூறுவதினாலும் பாபம் சம்பவிக்கும்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**

யிலும் அருமைப்பட உள்ளவனே. ஆனாலும், கலியனுடைய உள்ளத்தினுள்ளே எளியனாய் உளன் காண்.

### திருநெடுந்தாண்டகம் (பாசுரம் - 8) :

பெருமான் எழுந்தருளியுள்ள திவ்விய தேசங்கள் சிலவற்றை வரிசைப்படுத்துமிடத்து, *"நீரகத்தாய் நெடுவரையின் உச்சிமேலாய்!"* என்று சேவிக்கிறார். "திருநீரகத்தில் இருப்பவனே! உயர்ந்த திருமலையின் சிகரத்தில் நின்றவனே! என்கிறார். உன் திருவடிகளையே காண வேண்டும் என்னும் ஆசையால் கூப்பிடுகிறேன்" என்கிறார்.

மேலும் சில திருத்தலங்களைச் சேவிக்குமிடத்து,

*"பனிவரையின் உச்சியாய்"* என்று பாசுரமிடுகிறார்.

(பாசுரம்–9)

*"குளிர்ந்த திருமலையில் நின்றவனே"* உன்னைத் தேடி அடியேன் அலைகின்றேன் திருநெடுந்தாண்டகத்தில், முதல் பத்து பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் அருளியது. இரண்டாம் பத்து (11–20) திருத்தாயார் வார்த்தையாக அருளியது.

மூன்றாம் பத்திலுள்ள முதல் 5 பாசுரங்கள் (21–25) தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது. அடுத்த பாசுரம் (26) வண்டு விடு தூது, அடுத்தது (27) நாரை விடுதூது, இறுதி 3 பாசுரங்கள் (28,29,30) தலைவி ஊடல் கொண்டு தோழிக்கு உரைத்தவை.

தலைவி வீணையை மீட்டியும் பெருமான் வரவில்லை. அதனால், அவள் ஆவல் அதிகமாக, அவனது நீர்மை, பேராற்றல், அன்பு இவற்றை நினைத்துக் கூப்பிடுகிறாள்.

*"வடதிருவேங்கடம் மேய மைந்தா!"* என்றும் (16ஆம் பாசுரம்), *"வடக்கிலுள்ள திருமலையில் பொருந்தி வாழும் மிடுக்கனே!"* என்றும் சொல்லிக் கண்ணீர்த்துளிகள் இழியும்படியாகத் தளர்கின்றாள்... என்று திருத்தாயார் கூறுகிறாள்.

### சிறிய திருமடல் வரி-138 :

தலைவி தலைவனை நாடி மடல் ஊர்ந்து பெருமான் கோயில் கொண்டு இருக்கும் திருத்தலங்களுக்குச் செல்வதாகக் கூறுமிடத்து,

*"சீரார் திருவேங்கடமே"* என்கிறாள். சிறப்புடைய திருமலைக்குச் செல்வேன் என்கிறாள்.

### பெரிய திருமடல் வரி-12 - நிலமகளுக்கு :

*"தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்*
*என்னும் இவையே முலையா வடிவமைந்த"*

தலைவி ஒவ்வொரு திவ்விய தேசத்திலும் அர்ச்சை நிலையிலுள்ள பெருமானைக் கண்டு என் நிலையை நேரில் அறிவிப்பேன்... என்று கூறுமிடத்து,

*'மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை....''* (வரி 248), *"மேகங்கள் மின்னித்திரிகின்ற திருமலையில் எழுந்தருளி இருப்பவன் எனக்கு உபகாரகன்"* என்கிறாள்.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் 4 முழு திருமொழிகளிலும், பிற திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்யுமிடத்தும் திருமலையின் நினைவு தவறாமல் வந்து சேவித்ததையும் கற்று அனுபவித்தோம்.

*ஆழ்வார் எம்பெருமானார் தேசிகர் ஜீயர் திருவடிகளே சரணம்!*

முற்றும்.

- ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப் படுத்தாதீர்.
- பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

# திவ்விய திருத்தலம் திருமலை

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696

**வருடோத்ஸவம் :**

சப்தகிரீசனுக்கு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே சில சிறப்பு நாட்களில் உத்ஸவங்கள் நடைபெறும். அவற்றை வருடோத்ஸவம் என்று அழைக்கின்றனர். அவைகளில் சில முக்கியமான உத்ஸவங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**உகாதி மற்றும் இதர ஆஸ்தான சேவைகள் :**

ஒவ்வொரு ஆண்டும் உகாதி பண்டிகை (தெலுங்கு வருட பிறப்பு) அன்று திருமலைவாசனுக்கு “உகாதி ஆஸ்தானம்” தங்க வாயிலின் முன்பாக நடைபெறும். ஸ்ரீதேவி பூதேவியுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு வெகு சிறப்பாக நிவேதனம், வஸ்திர தாரணம் மற்றும் பஞ்சாங்கம் வாசித்தல் ஆகியவை நடைபெறும்.

தங்க வாயிலின் முன்பாக நடைபெறும் இந்த ஆஸ்தான உத்ஸவத்தை அர்ச்சகர்கள், ஆலய அதிகாரிகள் மட்டுமே தரிசிக்க இயலும். இது போன்றே ஆனிவர ஆஸ்தானம், தீபாவளி ஆஸ்தானம், ஸ்ரீராம நவமி ஆஸ்தானம், ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி ஆஸ்தானம் ஆகியவை நடைபெறும். இந்த உத்ஸவங்களை அனைவராலும் காண இயலாது.

**வருடாந்திர வசந்தோத்ஸவம் :**

ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று நிறைவடையும்படியாக 3 நாட்கள் இந்த உத்ஸவம் நடைபெறும். முதல் மற்றும் இரண்டாம் நாளில் ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கும், மூன்றாம் நாள் திருமலையப்ப ஸ்வாமியுடன் சீதா இராம லக்ஷ்மணருக்கும், ஸ்ரீருக்மணி ஸ்ரீகிருஷ்ணருக்கும் இந்த வசந்தோத்ஸவத்தை நிகழ்த்துவர். இரண்டாம் நாள் காலை திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேரில் எழுந்தருள்வார்.

**பத்மாவதி பரிணயோத்ஸவம் :**

வைகாசி மாதம் தசமியன்று திருவேங்கடமுடையானுக்கும், ஆகாச ராஜன் மகளான பத்மாவதிக்கும் திருமணம் நடைபெற்ற நாள். அந்நாளை நினைவு கூறும் வகையில் வைகாசி மாதத்தில், நவமி, தசமி, ஏகாதசி நாட்களில் மாலை வேளையில் திருமலை நாராயணகிரி தோட்டத்தில் ஸ்ரீபத்மாவதி தேவியின்






பரிணயோத்ஸவம் கண்ணுக்கு விருந்தாய் நடைபெறும். இதனை அனைவரும் தரிசித்து மகிழலாம்.

### ஜ்யேஷ்டாபிஷேகம் :

ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் ஜ்யேஷ்டா நட்சத்திரம் அன்று நிறைவடையும்படி மூன்று நாட்கள் ஆலயத்தின் உள்ளே ஸ்வாமியின் உத்ஸவ மூர்த்திகளுக்கு ஜ்யேஷ்டாபிஷேகத்தை நிர்வகிப்பர். இதனை “அபிதேயக அபிஷேகம்” என்பர்.

மிகப் பழமையான உத்ஸவ மூர்த்திகள் அபிஷேகத்தால் சிதைவு அடையாமல் பாதுகாக்கும் பொருட்டு நிகழ்த்தப்படும் உத்ஸவமே இது. ஒவ்வொரு ஆண்டும் இந்த மூன்று நாட்களில் மட்டுமே பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள், சந்தனம் போன்ற அபிஷேக திரவியங்களால் திருமஞ்சனம் நிகழ்த்துகின்றனர். முதல் நாள் வைர கவசத்துடனும், இரண்டாம் நாள் முத்துக் கவசத்துடனும், மூன்றாம் நாள் தங்கக் கவசத்துடனும் திருமலையப்ப ஸ்வாமியை திருமாடவீதிகளில் உலாவரச் செய்வர். கடைசி நாள் ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கக்கூடிய தங்கக்கவசம், மறுபடியும் அடுத்த வருடம் வரக்கூடிய இந்த உத்ஸவத்தின் பொழுதே கலைவர்.

### நாகபஞ்சமி-கருடோத்ஸவம் :

ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் வளர்பிறையில் வரக்கூடிய பஞ்சமி அன்று அதாவது கருட பஞ்சமி நாளில் மாலை திருமலை ஸ்வாமிக்கு கருடோத்ஸவம் நிகழ்த்தப்படுகிறது.

### பவித்ரோத்ஸவம் :

சில சந்தர்ப்பங்களில், பக்தர்கள் தீட்டு சமயங்களில் தெரிந்தோ, தெரியாமலோ ஆலயத்திற்குள் வந்து விடுகிறார்கள். அதனால் ஆலயத் தூய்மைக்கேடு ஏற்படுகிறது. எனவே அந்த தோஷங்களுக்குப் பரிகாரமாக இந்த பவித்ரோத்ஸவத்தை நிகழ்த்துகின்றனர். இந்த உத்ஸவம் மூன்று நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம், வளர்பிறையில் வரக்கூடிய தசமி, ஏகாதசி, த்வாதசி நாட்களில் ஹோமங்கள், பவித்ர பிரதிஷ்டை, பவித்ர சமர்ப்பணம் போன்ற வைதீக நிகழ்ச்சிகளுடன் இந்த உத்ஸவம் நடைபெறும். மூன்று நாட்கள்













மாலை நேரத்தில் திருமலையப்ப ஸ்வாமியை திருமாட வீதிகளில் எழுந்தருளச் செய்வர்.

**பிரம்மோத்ஸவம் :**

கலியுகத்தில் உலக நன்மைக்காக பிரம்மாதி தேவர்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீமஹா விஷ்ணு திருமலையில் திருவேங்கடமுடையானாக கன்யா மாதத்தில் திருவோண நட்சத்திரம் அன்று சுயம்புவாக அவதரித்தார்.

அந்நன்னாளை பிரம்மதேவன், ஸ்வாமி அவதரித்த நாளுடன் நிறைவடையும்படி 9 நாட்கள் வெகு சிறப்பாக இந்த உத்ஸவத்தை நிகழ்த்தினார். ஆதலால் இந்த உத்ஸவத்தை பிரம்மோத்ஸவம் என்று அழைத்தனர். சந்திரமானப்படி கன்யா மாதத்தில் நவராத்திரி பிரம் மோத்ஸவத்தையும் அதாவது 2 முறை பிரம்மோத் ஸவத்தையும் நிகழ்த்துவர்.

**கண்ணுக்கு விருந்தாய் நடைபெறும் பிரம்மோத்ஸவம் :**

திருவோணம் நட்சத்திரத்தன்று முடிவடையும்படி பத்து நாட்களுக்கு முன்னதாக துவஜாரோஹணத்தை ஆரம்பித்து, முடிவாக சக்ர ஸ்நானம், துவஜாவரோஹ

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- யாத்திரிகர்கள் தங்களுடைய விலையுயர்ந்த உடைமைகள், பொருட்கள், தங்க நகைகள் பத்திரமாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- தங்களுடைய உடைமைகளை பாதுகாப்பதற்காக சிறு குழந்தைகள் மற்றும் முதியோரை விட்டு செல்லுதல் கூடாது.
- அடையாளம் தெரியாத ஆட்கள் கொடுக்கும் தண்ணீர், டீ, காபி மற்றும் தின்பண்டங்களை உட்கொள்ள வேண்டாம்.
- திருடர்கள் பணம், நகை போன்ற பொருட்களை கீழே போட்டு, உங்கள் பொருட்களை அபகரிக்க எண்ணுவர். ஆசைப்பட்டு ஏமாறாதீர்கள்.
- அறையில் இருந்தால் மட்டும் செல்போன் சார்ஜிங் வைக்க வேண்டும். சார்ஜிங் வைத்து விட்டு வெகுதூரம் செல்லுதல் கூடாது.
- அடையாளம் தெரியாத ஆட்கள், நாங்களும் உங்கள் ஊரின் அருகில் வசிப்பதாகவும், உங்களுக்கு உதவி செய்கிறோம் என்றும் அறைகள், தரிசனம் முதலான வசதிகளைச் செய்து தருகிறோம் என்றால் அதை நம்பி ஏமாறாதீர்கள்.
- இலவசபேருந்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் உங்களுடைய மணிபர்ஸ், கைப்பைகளை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
- குளியலறைக்கு விலையுயர்ந்த பொருட்களை கொண்டு செல்லுதல் கூடாது. உடைமைகளை உங்களுடன் வந்த உறவினர்களிடமோ அல்லது தி.தி.தே. லாக்கரில் வைத்தல் வேண்டும்.
- லட்டு டோக்கன் அளிக்குமிடம், லட்டு வாங்குமிடம் மற்றும் க்யூ வரிசைகளில் மணிபர்ஸ், பைகளை பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.
- ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் பேருந்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் தங்கள் விலையுர்ந்த ஆபரணங்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளவும்.



ணத்துடன் இந்த பிரம்மோத்ஸவத்தை நிகழ்த்துவர். முதல் நாள் இரவு பெரிய சேஷ வாகனத்தில் துவங்கி, தினமும் காலை மாலை என வரிசையாக சிறிய சேஷ வாகனம், ஹம்ஸ வாகனம், சிம்ம வாகனம், முத்துப் பந்தல் வாகனம், கல்ப விருக்ஷ வாகனம், சர்வபூபால வாகனம், மோகினி அவதாரம், கருட வாகனம், அனுமத் வாகனம், யானை வாகனம், சூரியப்பிரபை வாகனம், சந்திரப் பிரபை வாகனம், திருத்தேர், குதிரை வாகனம் என நடைபெறும்.

கருடோத்ஸவம் நாளன்று மூலமூர்த்திக்கு அலங் கரிக்கப்படும் மகரகண்டி, லக்ஷ்மி ஹாரம், சஹஸ்ர நாம மாலைகள், சென்னையில் இருந்து வரக் கூடிய புதிய குடைகள், ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து கோதா தேவி மாலைகள் ஆகியவற்றை திருமலையப்ப ஸ்வாமிக்கும் அழகாக அலங்கரித்து, திருமாட வீதிகளில் தங்க கருட வாகனத்தில் எழுந்தருளச் செய்வர். எம்பெருமானும் திருமாடவீதிகளில் வீற்றிருக்கும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு திவ்ய தரிசனம் அளித்து அருள் புரிவார்.

ஆண்டிற்கு ஒரு முறை பத்து நாட்கள் நடைபெறும் இந்த பிரம்மோத்ஸவத்தில் திருமலை ஓர் இந்திர லோகம் போன்று கோலாகலமாகக் காட்சியளிக்கும்.

ஏழுமலைகளில் “கோவிந்தா, கோவிந்தா” என்று ஸ்வாமியை அழைத்தவாறு செல்லும் பக்தர்கள் ஒரு புறம். மறுபுறமோ பக்தர்களின் பஜனைக் குழு, கோலாட்டங்கள், ஹரிகதைகள், கலைக்குழுவினர், புஷ்கரிணி ஸ்நானம், தரிசனங்கள், இன்னொரு புறம் நித்ய அன்னதானங்கள், பிரசாதங்கள், மேலும் ஸ்ரீவாரி சேவைதாரர்கள், சாரணார் குழுக்கள், சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள், அர்ச்சகர்கள், தார்மீக ஆன்மீக சொற்பொழிவுகள்... இவ்வாறு பல வகையில் பக்தர்களின் கூட்டம் எண்ணிலடங்கா வண்ணம் காட்சி யளிக்கும்.

பிரம்மோத்ஸவம் நடைபெறும் இரவு நேரங்களில் திருமலை வண்ணமிகு மின் விளக்குகள் வருணிக்க முடியா வண்ணம் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக் கும். ஆலய பிரகாரம், அங்குள்ள மண்டபங்கள், பூங் காக்கள், வாயிலின் முன் பகுதி அனைத்தையும் மிக அழ காக அலங்கரித்திருப்பர்.

தேவதைகள், தேவர்கள் ஜோதி வடிவமாக மேலுல கில் இருந்து இறங்கி வந்து இந்த பிரம்மாண்ட நாயக னின் பிரம்மோத்ஸவத்தைக் காண்பது போல் காட்சி யளிக்கும் இத்திருமலை.

மற்றொரு சிறப்பு என்னவென்றால் புஷ்ப அலங் காரம். ஆலயம் முழுவதும் மணம் மிக்க பல வண்ண மலர்களால் விதவிதமாக அலங்காரம் செய்திருப்பர். இதனை நாம் காணும் போது மனதிற்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகும்.

**புஷ்ப யாகம் :**

பிரம்மோத்ஸவத்தில் ஏதேனும் தோஷங்கள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு ஆண்டுதோறும் பிரம்மோத்ஸவத்திற்குப் பின் கார்த்திகை மாதத்தில் திருவோண நட்சத்திரம் அன்று ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கு புஷ்பயாகம் நிகழ்த்துகின்றனர். 15ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற புஷ்பயாகம் இடையில் எப்பொழுது நின்று விட்டது என்பது தெரியவில்லை. மறுபடியும் 1980ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி முதல் துவங்கியது. புஷ்ப யாகத்தில் காலை திருமஞ்சனம், மாலை பலவித வண்ண மலர்களால் 21 முறை ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்வர்.

திருமலை வைபவம் தொடரும்...



காஞ்சி பூரணர்

# திருக்கச்சி நம்பிகள்



திருமதி. பிரேமா வரதன்,
புதுதில்லி, 98997 13565

பகவத் ராமாநுஜரை பேரருளாளனும் பெருந்தேவித் தாயாரும் (வேடன் வேடுவச்சியாக வந்து) யாதவப்ரகாசரிடமிருந்து காப்பாற்றி காஞ்சிபுரம் கொண்டு வந்து சேர்க்கின்றனர். எல்லா திவ்ய தேசங்களையும் விட்டு, எம்பெருமான் காஞ்சிக்கு உடையவரை அழைத்து வந்த நோக்கமென்ன? கீழே பார்போம்.

*''ஸ்ரீமத் காஞ்சீமுநிம் வந்தே கமலாபதி நந்தனம்*
*வரதாங்க்ரி ஸதா ஸங்க ரசாயன பராயணம்''*


தேவப் பெருமாளுடைய திருவடிகளிலே இடைவிடாது அன்பு பூண்டிருத்தலாகிற ரசாயன சேவையில் ஊற்றமுடையவர் திருக்கச்சி நம்பிகள். ஆயுர்வேத பிரசித்தமான ஒரு ஔஷத விசேஷத்திற்கு ரசாயனமென்று பெயர். அதனைப் பருகினார்க்கு அப்ரதிமமான புஷ்டியுண்டாகுமென்பது பிரசித்தம். நம்பிகளுக்குத் தேவப்பெருமாளுடைய திருவடி சேவையே ரசாயன சேவா ஸ்தாநீயமாய் விலக்ஷண புஷ்டியைத் தந்ததாயிற்று.

“காஞ்சி முநிம்” என்றது “காஞ்சீபூர்ண முநிம்” என்றபடி, “கமலாபதி நந்தனம்” – நம்பிகளின் திருத்தகப்பனாருக்குக் கமலாபதி என்று திருநாமம்.

*''தேவராஜ தயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீ பூர்ண முத்தமம்*
*ராமாநுஜ முநேர் மான்யம் வந்தேஹம் ஸஜ்ஜனாச்ரயம்''*

தேவப்பெருமாளுடைய திருவருளுக்குக் கொள்கலமானவரும், எம்பெருமானாருக்கு பூஜ்யரும், ஸத்துக்களுக்கு ஆச்ரய பூதருமான திருக்கச்சி நம்பிகளைத் தொழுகின்றேனென்கை.

மேற்கூறிய இவ்விரண்டு சுலோகங்களும் பிள்ளை லோகம் சீயருடைய சிஷ்யர்களில் ஒருவரான இராமாநுஜப் பிள்ளை என்பவர் பணித்த “ஸ்ரீகாஞ்சீ பூர்ண சதகம்” என்ற ஸ்துதியிலிருந்து எடுத்து அநுஸந்திக்கப்பட்டு வருவதாக விளங்குகிறது. பகவத் ராமாநுஜர் பேரருளாளனுக்கு ஆலவட்ட கைங்கர்யம் செய்து வரும் திருக்கச்சி நம்பியை ஆச்ரயித்து,



தானும் எம்பெருமானுக்கு ஏதாவதொரு தொண்டு செய்ய விரும்ப, திருக்கச்சி நம்பி, வரதனையே நேரில் கேட்டு, சாலைக்கிணற்று நீரை மடைப்பள்ளியில் கொண்டு சேர்க்கும் பணியை ராமாநுஜருக்கு ஒப்படைத்தார். ராமாநுஜரின் இக்கைங்கர்யத்துக்கு மூல காரணமே திருக்கச்சி நம்பிகளன்றோ! அர்ச்சா சமாதியை உடைத்துக் கொண்டு வரதன் பேசியிருக்கிறானென்றால் திருக்கச்சி நம்பிகளின் பெருமையை என்ன சொல்வது? அவருடைய "தேவராஜ அஷ்டகம்" சிறிது அனுபவிப்போம் வாரீர்!.

*"நமஸ்தே! ஹஸ்திசைலேச! ஸ்ரீமந் அம்புஜலோசந*
*சரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்தி*
*ஹரச்யத"*

எம்பெருமானுக்குப் பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரங்களென்று ஐந்து நிலைகளையும் இந்த சுலோகத்தில் அனுபவிக்கிற அழகு அறியத் தக்கது.


ஹஸ்தி சைலேச – அர்ச்சாவதாரம். ஸ்ரீமந் – பரவாசுதேவன் அம்புஜ லோசந – இந்நிலத்திலே அழகிய வடிவம் பூண்டு அவதரித்த ராமகிருஷ்ணாதி ரூப விபவாவதாரம். திருக்கண்ணழகைச் சொன்னது சர்வாங்க சௌந்தர்யத்தையும் சொன்னபடி, ப்ரணதார்த்தி ஹர – க்ஷீரஸாகர நிலய வ்யூகம். அச்யுத – அந்தர்யாமித்வம். அதாவது ஓரிடத்தையும் நழுவ விடாமல் எங்கும் பரந்துளன்.

இவ்வைந்து விளிகளும் தேவப்பெருமாளை நோக்கியவை.

*"ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண ப்ரவீண*
*கருணோல்பண*
*விலஸந்து கடாக்ஷாஸ்தே மய்யஸ்மின் ஜகதாம்பதே"*
(2)

முதல் சுலோகத்தில் ஸ்ரீமந்! அம்புஜ லோசன! என்ற இரண்டு விளிகளையும் விவரிப்பது போன்றுள்ளது இந்த சுலோகம். ஸ்ரீமானாகையாலே ஸமஸ்த பிராணிகளையும் காத்தருளக் கடமைப்பட்டவன். அம்புஜ லோசனனாகையாலே தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழித்தருள்வாய் என்று பிரார்த்திக்கிறார். ப்ரவீணே – ப்ரவீணமான கருணை மிக்கவன் என்கிறார்.

*"நிந்திதாசாரகரணம் நிவ்ருத்தம் க்ருத்ய கர்மண:*
*பாபீயாம்ஸம் அமர்யாதம் பாஹிமாம் வரத ப்ரபோ"* (3)




வரம் தரும் பெருமானே! செய்யாதன செய்யும் பாபிஷ்டனான அடியேனைக் காத்தருளி உன்னுடைய ப்ரணதார்த்திஹரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் என்று பிரார்த்திக்கிறார்.

இனிவரும் சுலோகங்களெல்லாம் "அச்யுத!" என்னும் விளியை விவரிப்பனவாகும்.

*"ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதிவ்யாக்ர பீஷணே*
*விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷாபாதபசாலிநி."* (4)

*"புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு*
*புஷ்கலே*
*க்ருத்யா க்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ்தத"*
(5)

*"அஜஸ்த்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்க*
*அக்ஷமம்*
*க்ஷீண சக்தி பலாரோக்யம் கேவலம் க்லேச*
*ஸம்ஸ்ரயம்."* (6)

*"ஸந்தப்தம் விவிதை துக்கை: துர்வசை: ரேவமாதிபி:*
*தேவராஜ தயா ஸிந்தோ! தேவ தேவ ஜகத்பதே!"* (7)

*"த்வதீக்ஷண ஸுதா ஸிந்து வீசி விக்ஷேப சீகரை:*
*காருண்ய மாருதா நீதை: சீதளை ரபிஷிஞ்சமாம்"* (8)

"கருணைக் கடலான தேவராஜனே! தேவாதி தேவனே! உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தையாயிருப்போனே! கொடிய நோய்களாகிற புலிகளால் பயங்கரமாகவும், சப்தாதி விஷயங்களாகிற சிறு புதர்கள் நிறைந்ததாயும், ஆசையாகிற மரங்கள் அடர்ந்ததாயும், மக்கள், மனைவியர், வீடு, நிலம் ஆகிற கானல் நிரம்பிய

தாயுமிருக்கின்ற ஸம்ஸாரமாகிய கொடிய காட்டில் இன்னது செய்யத் தக்கது. இன்னது செய்யத் தகாதது என்ற விவேகமின்றி இங்குமங்கும் சுழன்றுழல்பவனாய், எப்போதும் விடாய்த்தவனாய், உடல் இளைத்தவனாய், அஸமர்த்தனாய், சக்தி, பலம், ஆரோக்கியம் இவை ஒன்றுமில்லாதவனாய், க்லேசங்களே மிகுந்திருக்கப் பெற்றவனாய், சொல்ல முடியாத இப்படிப்பட்ட பல வகைத் துன்பங்களினால் தாபமுற்றவனாயிருக்கின்ற அடியேனை, காருண்யமாகிற காற்றினால் கொண்டு தள்ளப்பட்டவையும், குளிர்ந்தவையுமான உன்னுடைய கடாக்ஷம் நதீப்ரவாஹத் திவளைகளினால் நனைத்தருள வேணுமென்கிறார்". ஐந்து சுலோகங்களும் சேர்ந்து ஏகாந்வயமாகிற படியாலே "குலகம்".

*"ஸம்ஸார மருகாந்தாரே"* என்று ஸம்ஸாரத்தை மருகாந்தாரமாகச் சொல்லியிருக்கும் போது "த்ருஷா பாத பசாலிநி" என்னக் கூடுமோ? மரம், செடி, கொடி முதலானவை ஒன்றுமில்லாத பாலை நிலத்திற்கன்றோ ம்ருகாந்தாரமென்று பெயர் என்று சிலர் சங்கிப்பதுண்டு. இங்கு பெரியோர் பணிக்கும் ஸமாதானமாவது...

பாலை நிலத்தில் நிழல் தரும் படியான மரங்கள் இருக்க ப்ரஸக்தியில்லையாயினும் மொட்டை மரங்கள், மலட்டு மரங்கள் என்று சொல்லக் கூடிய சில விருக்ஷங்கள் விரளமாகவாவது இருக்கக் கூடுமாதலால் அவற்றைத் திருவுள்ளம் பற்றி அருளிச் செய்ததாகக் கொள்ளலாமென்று.

தாபதாரர்களின் மீது ஒரு பாட்டம் மழை பொழிந்தால், சகல தாபங்களும் தீர்ந்து குளிர்ச்சி உண்டாகுமாப் போல திருக்கச்சி நம்பிகள் தாமும் ஸம்ஸாரிகள் தாபங்களெல்லாம் தணிந்து, குளிர்ச்சி உண்டாகுமாறு தேவப் பெருமாளுடைய திருவருள் நோக்க மழை பொழிவை பிரார்த்தித்து, தம்முடைய ஸ்துதியையும் தலைக்கட்டினாராயிற்று.

திருக்கச்சி நம்பிகள் திருவடிகளே சரணம்.

*ப்ரஹ்மா தவமிருந்து கச்சி தன்னில் வந்துதித்து*
*அன்புடனே திருக்கச்சி நம்பியுடன் பேசிய*
*பேரருளாளனுக்கு ஜய மங்களம் - நல்ல*
*பெருந்தேவித் தாயாருக்கு சுப மங்களம்.*



## ஸ்ரீமத்பாகவதம் வினாக்கள்

திருமதி என். ஹேமா,
திருப்பதி, 90945 68800

1. பிரம்ம தேவர் தன் முகமாய் யாரை சிருஷ்டித்தார்?
2. பிரளய காலத்தில் மூழ்கி இருந்த பூமியை மேலே கொண்டு வந்து நிறுத்தியவர் யார்?
3. தேவஹூதி சித்தியடைந்த இடம் எது?
4. தேவஹூதி எந்த வடிவில் அங்கு வாசம் செய்கிறாள்?
5. தத்தாத்ரேயரின் தாய், தந்தை யார்?
6. சதிதேவி தேஹத்யாகம் செய்து பார்வதியாகி யாருக்கு புத்ரியானாள்?
7. தன் தவத்தால் 24 ஆயிரம் துருவ நட்சத்திரமாகிய ராஜா யார்?
8. அங்க ராஜனின் மகன் இவனின் மற்றொரு அவதாரம் எது?
9. பிரிய விரத ராஜாவின் குரு யார்?
10. தேவயானியின் மகனான யயாதியின் வம்சம் எது?

விடைகளுக்கு 48ம் பக்கம் பார்க்கவும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தலைக்கவசம்! உயிர் கவசம்!!**

திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.

வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

**வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தால் மட்டுமே மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படும்.**

– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை



# தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மஸ்வாமி பிரம்மோத்ஸவம் 02-03-2020 முதல் 10-03-2020 வரை











**02-03-2020**
**திங்கட்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**03-03-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : அனுமத்வாகனம்

**04-03-2020**
**புதன் கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**05-03-2020**
**வியாழக்கிழமை**
பகல் : திருச்சி உத்ஸவம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**06-03-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : திருச்சி உத்ஸவம்
இரவு : கஜ வாகனம்

**07-03-2020**
**சனிக்கிழமை**
பகல் : திருச்சி உத்ஸவம்
மாலை : சர்வபூபால வாகனம்
இரவு : கல்யாணோத்ஸவம்
கருட சேவை


**08-03-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : தூளி உத்ஸவம்

**09-03-2020**
**திங்கட்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை
குதிரை வாகனம்

**10-03-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : வஸந்தோத்ஸவம், சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

# திருமலையில் இரதசப்தமியை முன்னிட்டு திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற சப்தவாகன சேவைகள்

01-02-2020



# திருச்சானூரில் இரதசப்தமியை முன்னிட்டு ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற சப்தவாகன சேவைகள் 01-02-2020



# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



2020 பிப்ரவரி 4ஆம் தேதி அன்று திருப்பதி ஸ்ரீவேங்கடேஸ்வரா கால்நடை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு முக்கிய விருந்தினராக வருகை புரிந்த ஆ.மா. மேதகு ஆளுநர் ஸ்ரீவிஸ்வபூஷன் ஹரிசந்தன் அவர்களை தி.தி.தே. பத்மாவதி விருந்தினர் மாளிகையில் மரியாதை நிமித்தமாக வரவேற்ற தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு.பி. பசந்த் குமார் ஐ.ஏ.எஸ். கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி திரு. கோபிநாத் ஜெட்டி ஐ.பி.எஸ்., திருப்பதி துடா தலைவர் தி.தி.தே. அறக்கட்டளைக்குழு உறுப்பினர் திரு. செவிரெட்டி பாஸ்கர் ரெட்டி அவர்கள்



திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி ஆலய வருடாந்திர தெப்போத்ஸவம் பிப்ரவரி 02 முதல் 08 வரை நடைபெற்றது. இவ்வுத்ஸவத்தில் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி, ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி ஆண்டாள் தாயார் மற்றும் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி முறையே தெப்பத்தில் எழுந்தருளினர்.





ஜனவரி 26 அன்று 71வது குடியரசு தின விழாவை முன்னிட்டு தி.தி.தே. நிர்வாக அலுவலகப் பின்புறம் உள்ள விளையாட்டு மைதானத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ். அவர்கள். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி.தர்மாரெட்டி அவர்கள், தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர் திரு. பி.பசந்த் குமார் ஐ.ஏ.எஸ். அவர்கள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி திரு. கோபிநாத் ஜெட்டி ஐ.பி.எஸ். அவர்கள் மற்றும் உயர்அதிகாரிகள், ஊழியர்கள் பங்கு கொண்டனர்

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல்–2



# மனிதப்பிறவியின் மாண்பினை உணர்த்தவே சடங்குகள்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி,94434 39963

பிறப்பில் மிகச் சிறந்த பிறவி மனிதப்பிறவி. இதில் எந்த ஐயப்பாடும் இல்லை. காரணம், இந்த மனிதப் பிறவியில் நாம் செய்யும் செயல்களே நமக்கு நன்மையைத் தரும். புகழைத் தரும். ஏற்றத்தைத் தரும். இவ்வுலக வாழ்க்கையை இன்ப மயமாக்கும். இவ்வுலக வாழ்க்கை முடிந்தபின்னர் நமக்கு பேரின்பமான உலகத்தைப் பெற்றுத்தரும். இதைத்தான் எல்லா வேத, தர்ம நூல்களும் சொல்லுகின்றன.

ஆனால், இந்த மனிதப் பிறவியில்தான் நாம் சறுக்கி விழுவதற்கான பல வாய்ப்புகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட விஷயங்களை அறிவுறுத்தி – தெளிவுபடுத்தி – மனிதன் விழுந்து விடாமல் வாழ்ந்து விடுவதற்கான வழிகாட்டியாக அமைந்ததுதான் சாத்திரங்கள் என்று சொல்லப்படும் வேதங்கள்.

வேத சாரமான விஷயங்களை ஆழ்வார்கள் அமுதத் தமிழில் எல்லோருக்கும் புரியும் வகையில் பாசுரங்களாக இயற்றியருளினார்கள். இதைப் “பிரபந்தம்” என்று போற்றுகின்றோம். மனிதனின் பிற (இன்னொரு பிறவி) பந்தங்களில் விழுந்து விடாமல் தடுக்கவே பிரபந்தங்கள்.

பந்தங்களில் உயர்ந்த பந்தம் இறைவனோடு உள்ள பந்தம். இந்த பந்தத்தை உணரச் செய்வதே ஆன்மிகம், வழிபாடு எல்லாம்.

இதை ஆண்டாள் *“உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது”* என்று திருப்பாவையில் பாடுகிறாள். இப்பந்தத்தின் உணர்வால் பாடப்பட்டதே ஆழ்வார்களின் அருந்தமிழ்ப் பாசுரங்கள்.

இப்பாசுரங்களைப் பயில்வதன் மூலம் மனிதப் பிறவியின் தத்துவத்தை உணர்ந்து கொண்டு, அரிதின் கிடைத்த மனிதப்பிறவி சிறப்பு அடைவதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டும் அல்லது என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மனிதனின் வாழ்வு சிறப்பாக மலர்ந்து மணம் வீச வேதம் வகுத்துக் கொடுத்த செயல்களை முறையாகவும், நிறைவான மனதோடும் செய்வதே தர்மம்.

இத்தர்மங்களைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவருக்கு கிடைக்கும் நன்மையை போலவே, அவர் வாழுகின்ற மனித சமூகத்திற்கும் நன்மை கிடைக்கிறது.

பொதுவாகவே வேத நூல்கள் இரண்டு பிரிவாக இருப்பதை நாம் காண்கின்றோம்.

முதல் பிரிவு என்னென்ன செய்து எப்படி வாழ வேண்டும் என்பதை விளக்கும் பகுதி. இதனை கர்ம காண்டம் என்று சொல்வார்கள்.

இதன்படி வாழ்ந்தவர்கள், அடுத்து எதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதை விளக்குகின்ற பகுதி ஞான காண்டம் (பிரம்ம காண்டம் அல்லது உபநிடதப் பகுதி).

மனிதராகப் பிறந்தவர்கள் நேரடியாகவே ஞான காண்டமாகிய பிரம்மத்தை அறிவது என்பது முடியாது. எனவேதான் பூர்வாங்கமாகக் கருமத்தைச் (செயலை) சொன்னார்கள்.

ஸ்ரீபாஷ்யக்காரரான ஸ்வாமி ராமாநுஜரும் கர்ம காண்ட தர்மத்தை அனுசரித்து உத்தர காண்டமாகிய பிரம்ம சூத்திரத்தை விளக்கத் தொடங்குகிறார்.

இந்தக் கர்ம காண்டத்தில் பல்வேறு சடங்குகளை வேதம் விளக்குகிறது. அது குறிப்பால் சொல்லியதைச் செய்முறை நூலாக விரிவாக விளக்குகிறது ஸ்மிருதிகள். இதை மனு முதலிய தவசீலர்கள் தங்கள் தவவலிமையால் தொகுத்துக் கொடுத்தார்கள்.

இந்த நூல்களின் மூலமாகத்தான், ஒவ்வொருவரும் வாழும்போது, எந்தெந்த செயல்களை எப்படி செய்ய வேண்டும், அதனால் கிடைக்கும் நன்மை என்ன, என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதைப் புரிந்து கொண்டு வாழ்க்கையைச் செம்மையாக வாழவே பல்வேறு சம்ஸ்காரங்கள் அல்லது சடங்குகள்.

வேத புருஷனுக்கு ஆறு அங்கங்கள் உண்டு. ஆறு அங்கங்களை "ஷட் அங்கம்" என்று வடமொழியில் சொல்லுவார்கள்.

*"ஆறு அங்கம் கூற அவதரித்த பெருமான்"* என்று திருமங்கையாழ்வாரைச் சொல்லுவார்கள்.

ஆறு அங்கங்களில் ஒன்று தான் கல்பம். அது வேத புருஷனுக்கு கை போன்றது. யார் யார் எதை எதைச் செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எந்த பொருள்களைப் பயன்படுத்த வேண்டும்? எந்த மந்திரங்களை ஓத வேண்டும்? என்றெல்லாம் எடுத்துச் சொல்வது கல்பம். ஷட் அங்கம் கூறுவதைச் செய்வதுதான் ஷடங்கு (சடங்கு).

சம்ஸ்காரம் என்ற சொல்லுக்குச் சரிவரச் செய்தல், நிறைவாகச் செய்தல் என்றெல்லாம் பொருள் உண்டு.

ஆத்மா உடம்பில் இருக்கும் பொழுதே செய்யும் இச்செயல்களால், எம்பெருமானுக்குத் தகுதியான ஜீவாத்மாவாக அது மாறுகிறது.

பரமாத்மாவை அறியவும், அணுகவும், ஜீவாத்மாவை தகுதி உடையதாக ஆக்குகிறது சம்ஸ்காரங்கள்.

ஜீவாத்மாவுக்கு உலகில் ஏற்படக்கூடிய தோஷங்களை நீக்கி, மோட்சத்தை அடைய பக்குவப்படுத்தவும் இந்த சம்ஸ்காரங்களை வேதம் விதித்துள்ளது.

முதல் முதலாக ஒரு குழந்தை பிறக்கும் பொழுது, மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது தொடங்கி, அந்தக் குழந்தை வளர்ந்து, வாழ்ந்து, முடித்த பிறகு, மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்பது வரையில் பல்வேறு சடங்குகளை நாம் பார்க்க இருக்கின்றோம்.

ஒரு முக்கியமான விஷயம்.

பிறக்கும் பொழுதும் நமக்கு செய்யப்படுகின்ற சடங்கு மற்றவர்களால் தான்.

மறைந்த பிறகும் நமக்கு மற்றவர்களால் தான் சடங்குகள் செய்யப்படுகின்றன.

இடையில் நாமே செய்து கொள்ள வேண்டிய சடங்குகளும் இருக்கின்றன.

இதன் மூலம், மனிதன் தன் உன்னதத்தை உணர்ந்து கொண்டு, அதற்கேற்ப ஒழுகலாம். இச்சடங்குகள் நாற்பது என்றாலும், இன்று பலரும் பலவற்றை விட்டு விட்டு, தவிர்க்க முடியாத ஓரிரு சடங்குகளை மட்டுமே செய்கின்றனர். அதையும், புரிந்து கொள்ளாமலும், முழுமை இல்லாமலும் செய்கின்றனர்.

ஒன்றைப் புரிந்து கொண்டால்தானே முழுமை வரும்.

ஒரு செயல் சிரத்தை இல்லாமலும், முழுமையாக இல்லாமலும், செய்யப்படும் பொழுது, அதன் பலன் மட்டும் எப்படி முழுமையாகக் கிடைக்கும்?

இதைத்தான் திருமங்கையாழ்வார்

*"கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்*
*கருத்துளே திருத்தினேன் மனத்தை*
*பெற்றிலேன் அதனால் பேதையேன்"* என்று பாடுகிறார்.

மனித வாழ்வின் நோக்கங்களை நான்கு விதமாக பிரித்து சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்.

இதைத் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்று தெரிந்து கொள்ளலாம்.

இதில் நான்காவது நிலையாகிய வீடுபேற்றினை பெறற்கரிய இன்பம் என்றே போற்றுகின்றன சாத்திரங்கள். மனிதராகப் பிறந்தவர்கள் மட்டுமே இந்த வீட்டின் பத்தை எளிதாகப் பெற இயலும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அப்படியானால் இவ்வீட்டின்பத்தை யார் பெறுவார்கள்? எப்படி வாழ்ந்தால் பெறலாம் என்பதைத் தெரிந்து கொள்ள அமைந்தது தர்மசாத்திரங்கள்.

இந்த தர்ம சாத்திரங்களின்படி ஒருவன் நடந்தால் அவன் நிச்சயமாக பேரின்பப் பேற்றினை அடைவான்.

வாழும்போது இவ்வுலகில் வாழ்கின்ற வாழ்க்கையும் மகிழ்ச்சியாகவே இருக்கும்.

இதைப்பற்றித்தான் ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் வெவ்வேறு இடங்களில் எளிமையாகப் பாடிச் சென்றிருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் ஆழ்வார்கள் பாசுர வழி நின்று அடுத்தடுத்துப் பார்ப்போம்.

அருளிச்செயல் தொடரும்...

## சேவையின் பலன்கள்

**சகல லோக சார்வபௌமனான ஶ்ரீநிவாசனுக்கு நித்யசேவைகள் மற்றும் எத்தனையோ உத்ஸவங்கள் வழிவழியாய் தடையின்றி செய்யப்பட்டு வருகின்றது. எப்பொழுது தொடங்கப் பட்டதாயினும் இச்சேவைகள் வைபவம் என்றென்றும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. தலைமுறைகள் மாறினாலும், குறையாத பக்தி சிரத்தையுடன் பக்த கோடிகளை திளைக்கச் செய்கின்றன. இங்ஙனே திருவேங்கடமுடையானுக்கு நடைபெறும் சேவைகளை தரிசிப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய பலன்களை அறிந்து கொள்வோம்.**



**திருமலை ஶ்ரீநிவாஸனின் சுப்ரபாதமென்னும் திருப்பள்ளியெழுச்சி சேவையில் கலந்து கொண்டால், நம் மனது விழித்துக் கொண்டு, விழிப்புணர்ச்சி பெற்று, பரந்தாமனின் சேவையில் அர்ப்பணமாகிறது.**

**தோமாலை சேவை என்றால் புஷ்ப அலங்கார சேவை என்று பொருள். இந்த சேவையில் கலந்து கொண்டவர்களுக்கு, மனது என்ற புஷ்பம் ஶ்ரீநிவாஸனின் பாதத்தில் சேர்ந்து ஜன்மம் தந்யமாகும்.**

**ஸ்வாமி அர்ச்சனையில் மனதை ஒன்றி நின்றால் ஶ்ரீநிவாசனின் பாதத்தில் மனது லயித்து ஆத்யாத்மீக ஆனந்தம் கிடைக்கும்.**

**ஸ்வாமியின் அபிஷேக தரிசனம் ஒன்று கிடைத்தால் சரீரத்துக்கும், மனதுக்கும் சம்பந்தப்பட்ட துன்பங்கள் விலகி லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும்.**

**விசேஷ பூஜை நாட்களில் பங்கு கொண்டவர்களுக்கு விசேஷமான கோரிக்கைகள் நிறைவேறும்.**

**அஷ்ட தள பாத பத்மாராதனை சேவையை தரிசனம் செய்தால் ஶ்ரீநிவாஸன் கடாக்ஷத்தால் வம்சம் விருத்தி அடையும்.**

**திருப்பாவாடை சேவையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னசெழிப்பு கிடைப்பதோடு நிலவளமும், பசுக்களின் வளமும் பெருகும்.**

**அநுதினம் நித்ய கல்யாண உத்ஸவ தரிசனம் சுபத்தைக் கொடுக்கும். நித்ய டோலோத்ஸவ தரிசனம் சத்ஸந்தானத்தைக் கொடுக்கும்.**

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 43

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | 2 | 3 |
| | ■ | 4 | 5 | | | | 6 | 7 | | ■ | |
| | 8 | | 9 | | | | ■ | | 10 | ■ | |
| | | | | | | | | | | 11 | |
| | | | | 12 | | | | | ■ | ■ | |
| | | | | ■ | 13 | | | | | | |
| | | ■ | | ■ | | | | | | 14 | |
| ■ | 15 | ■ | ■ | 16 | | | | | | | |
| 17 | | | | ■ | | | | | | 18 | |
| | ■ | | | | | | | 19 | ■ | ■ | |
| | | | | | | | | | | 20 | 21 |
| | ■ | ■ | ■ | | | | | | | | 22 |

தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.
98418 13323

விடைக்கு 41 ஆம் பக்கம் பார்க்கவும்.

**இடமிருந்து வலம்**

1. பீமன் பயன்படுத்தியதாகச் சொல்லப் படும் கதாயுதம் ஒன்று கேரளாவில் இக்கோயிலின் முன்பு மேடையில் வைக்கப்பட்டுள்ளது....(7)
9. அர்ச்சுனனுக்கு சாரதியாக இருந்தவர்..... (4)
12. பஞ்ச ஆயுதங்களில் ஒன்று.... (5)
13. கருடாழ்வார் சங்கு சக்கரம் ஏந்தி நான்கு கைகளுடன் காட்சி தரும் தலம்.... (7)
16. பெருமாள் திருமொழி பாடிய ஆழ்வார்..(8)
17. திருமலைக்கு நடைபாதையில் மலை ஏறத் துவங்கும் இடம்....(4)

**வலமிருந்து இடம்**

2. அகோபிலம் என்ற வார்த்தையில் அகோ என்றால்.....(4)
6. பாற்கடலைக் கடைய வாசுகி......(4) மாறியது.
11. திருநீர்மலையில் நடந்த கோலத்தில் உள்ள பெருமாள்......(10)
14. பாற்கடலைக் கடையும்போது வாசுகி யின் தலைப்பகுதியை பிடித்துக் கொண்டவர்கள்.......(6)
18. பூரி ஜகன்நாதர் ஆலயத்தில் மஞ்சள் நிறத்தில் இருப்பவர்.... (6)
19. வைகுண்டத்தில் பெருமாள் அருகில் இருக்கும் பேறு பெற்றவர்கள்......(7)
20. ஸ்ரீநிவாசப் பெருமாள் குபேரனிடம் கடன் வாங்கியதாக குறிப்பிடும் புராணம்.....(10)
22. பிரம்மாவின் சிரசைக் கொய்ததால் விளைந்த சாபத்தில் இருந்து விடுபட சிவபெருமான் தவமிருந்த தலம்.....(8)

**மேலிருந்து கீழ்**

1. ஆயர் தேவு எந்த தலத்தில் உள்ளான்..(7)
3. இராமாநுஜர் எந்த திவ்ய தேசக் கோயில் கோபுரத்தின் மீதேறி நின்று திருஎட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார்.....(8)
4. சாளக்கிராமக் கல்லினால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கும் பெருமாள் உள்ள எட்டுத்தலங்களில் ஒன்று..... (5)
5. காஞ்சிபுரத்தில் வைகாசி மாதம் மூன்றாம் நாள் விடியற் காலை நடைபெறும் விழா.... (6)
7. பெருமாளின் ஐந்து நிலைகளில் ஒன்று.....(4)
8. பெருமாளின் பஞ்ச ஆயுதங்களில் ஒன்று.... (2)
17. ஏழு மோட்ச புரிகளில் ஒன்று..... (4)

**கீழிருந்து மேல்**

10. வாமன அவதாரத்தில் முதல் அடியை அளந்தது.....(2)
15. பெரிய ஜீயர் என்று போற்றப்படுபவர் மணவாள .......(5)
21. மகாபாரதப் போரில் 14ஆம் நாளில் பாண்டவர்களின் படையை கடுமையாக எதிர்த்துப் போரிட்டவர்..... (4)

தெலுங்கு மூலம் : திரு. எம். ராமகிருஷ்ணமாசார்யுலு
தமிழாக்கம் : திருமதி பா. காயத்ரி, 97446 57115

# ஸ்ரீமகாலக்ஷ்மி தேவி! கொல்ஹாபூர் நாயகி!!

சமுத்திர ராஜனின் புதல்வியும், மங்களங்களின் இருப்பிடமும், ஐச்வர்யத்தின் ராணியுமான மகாலக்ஷ்மி தேவி மகாவிஷ்ணுவின் மனைவி ஆவார். ஸ்ரீஹரி அவதரிக்கும்போதெல்லாம் மகாலக்ஷ்மியும் அவதரிப்பாள். அதனால்தான் திருமலையப்பன் "ஸ்ரீநிவாசன்" என்றும் அழைக்கப்படுகிறார். (ஸ்ரீ–மகாலக்ஷ்மி, நிவாசா – நிலையம். எனவே ஸ்ரீமகாலக்ஷ்மியின் நிலையம்)

மகாவிஷ்ணுவின் மார்பினை பிருகு முனி எட்டி உதைத்த போதும், அம்முனிவரிடம் அமைதியாக இருந்த எம்பெருமானின் செயலைக் கண்டு கோபமுற்ற லக்ஷ்மி தேவி வைகுண்டத்தை விடுத்து, பூலோகத்தில், "கொல்ஹாபூர்" என்னும் நகருக்குச் சென்றார். அங்கிருந்த அசுரர்களை அழித்ததால் "கொல்ஹாபுர வாஸினி" மற்றும் "கரவீரபுரநிவாஸினி" என்று சிறப்பாக வழிப்படப்படுகிறாள். மகாலக்ஷ்மி இல்லாத வைகுண்டத்தை விடுத்து, எம்பெருமானும் மகாலக்ஷ்மியைத் தேடி வேங்கடாசலத்திற்கு வந்து "திருவேங்கடவனாக" அருள் புரிந்து, பிறகு கொல்ஹாபுரத்தில் மகாலக்ஷ்மிக்காக 10 வருடம் தவம் புரிந்தார். பின் அசரீரியின் கூற்றுபடி, ஸ்வர்ணமுகி ஆற்றங்கரையில் பத்மசரோவரத்தை அமைத்து, 12 வருடம் தவம் புரிந்தார். மகாலக்ஷ்மி தேவியும் அங்கு 1000 இதழ்கள் கொண்ட தங்கத் தாமரையில் அலர்மேல் மங்கையாய், பத்மாவதியாய் தோன்றினாள்.

**தல புராணம் :**

பிருகு முனிவரின் செயலால் கோபமுற்ற மகாலக்ஷ்மி தாயார் பாதாள லோகத்திற்குச் சென்று தவமிருந்தார். அப்பொழுது இதனை அறிந்த அகஸ்திய முனி மஹ ரிஷிகளுடன் அங்கு சென்று, யக்ஷல யமணி என்றும், சிவாலயமணி என்றும், தென் காசியென்றும் (தக்ஷன் வேள்வியின்போது சதிதேவியின் கண்கள் விழுந்த திருத்தலம்), கரவீரபுரம் என்றும் சிறப்புப்பெற்ற கரவீரபூரத்திலேயே அர்ச்சை வடிவில் எழுந்தருள வேண்டினர். அவர்களின் வேண்டுகோளின்படி மகாலக்ஷ்மியும் இத்தலத்தில் எழுந்தருளினார்.

**"கொல்ஹாபுரம்" மற்றும் "கரவீரபுரம்" பெயர்க் காரணம் :**

பிரம்ம தேவன் பூலோகத்தில், தன் மானச புத்திரர்களாக மூவரைப் படைத்தார். அவர்கள் கயாசுரன், லவணாசுரன் மற்றும் கொல்ஹாசுரன் என்னும் மூன்று அரக்கர்களாயினர். மக்களையும் முனிவர்களையும் கொடுமை படுத்திய அவர்களின் நடவடிக்கையை பொறுக்க முடியாமல் ஸ்ரீஹரி கயாசுரன் மற்றும் லவணா சுரனை அழித்தார். தப்பித்த கொல்ஹாசுரன் மகா விஷ்ணுவைக் கொல்லும் சக்தியைப் பெற கடுந்தவம் புரிகிறான். கொல்ஹாசுரனின் இரு புத்திரர்கள் அரசை ஆள, அவர்களை கொல்ஹாசுரனின் எதிரியான சுகேசி கொன்று கொல்ஹாபுரத்தை கைப்பற்றுகிறான். கொல்ஹாசுரனை விட கொடியவனாக அவன் விளங்க, கொல்ஹாசுரன் தவம் முடிந்து திரும்பி தன் நாட்டிற்கு வந்து, நடந்ததை அறிந்து சுகேசி மற்றும் அவனது வம்சத்தினரை அழித்து, தேவர்களை கொல்ல முயன்றும் முடியாததால் அதன் காரணத்தை ஆராய்ந்து அறிகிறான்.

மகாலக்ஷ்மி கொல்ஹாபுரத்தில் வசிப்பதால்தான் தனது முயற்சி தோல்வியடைகிறது என்பதை அறிந்து, தேவி மகா லக்ஷ்மியை நோக்கி



கடுந்தவம் புரிந்தான். அவன் முன் தோன்றிய லக்ஷ்மி தேவியிடம், 100 வருடங்கள் வரை என் நாட்டிற்குள் தாங்கள் வரக்கூடாது என்று வரம் பெற்று திரும்பினான், அவன் வயது முதிர்ந்ததால் அரசுரிமையை தனது மகன் கரவீரனிடம் ஒப்படைக்கிறான். தனது தந்தையை விட கொடுமைக்காரனாகிய கரவீரனின் நடவடிக்கையால் கோபமடைந்த சிவ தேவன் அவனை வதிக்கிறார். சாகும் முன் அவ்விடம் தனது பெயரால் வழங்கப்பட வேண்டும் என்று அவன் வேண்ட அவ்விடத்திற்கு கரவீரபுரம் என்று பெயர் ஏற்படுகிறது.



தன் மகன் வதைக்கப்பட்டதை அறிந்த கொல்ஹாசுரன், கொந்தளித்து தேவர் களை கொடுமைப்படுத்த, அவர்கள் லக்ஷ்மி தேவியை நாட, தேவி அவர்களை பொறுமை காக்கக் கூறி, 100 வருடங்களுக்குப் பிறகு அங்கு வந்து கொல்ஹா சுரனை வதைக்கிறார். சாகும் முன்னர் கொல்ஹாசுரன் இவ்விடத்தில் தேவி எழுந்தருள வேண்டும் என்றும், இவ்விடம் தன் பெயரால் அறியப்பட வேண்டும் என்றும் வேண்ட, தேவியும் அவ்வரத்தை அளிக்கிறாள்.



## ஸ்ரீ மகாலக்ஷ்மி கோயில் :

கோயிலின் கர்ப்ப கிரகத்தில் 6 அடி நீளம், 2 அடி உயரம் உடைய பீடத்தில் அமர்ந்த நிலையில், மேற்கு நோக்கி சிம்ம வாகனத்துடன் காட்சித் தருகிறாள். நான்கு கைகள் கொண்ட, மூன்றடி உயரமுள்ள தேவியின் விக்ரகம், பழம், தண்டாயுதம், கவசம் மற்றும் ஒரு பாத்திரத்தை கைகளில் ஏந்தியவாறு அருள் புரிகிறாள். இக்கோயிலில், வருடத்திற்கு 2,3 முறை, கருவறையின் மேற்கில் உள்ள ஒரு சிறிய ஜன்னல் வழியாக தொடர்ந்து மூன்று நாட்களுக்கு, சூரியன் மறையும் வேளையில், சூரிய ஒளி தேவியின் முகத்தில் விழுகின்றது. 11ஆம் நூற் றாண்டில் கந்தராதித்யா ஆட்சியின் போது கோயில் விரிவுபடுத்தப்பட்டு, பிரகாரத்தினுள் “மகாகாளி” மற்றும் “மகாசரஸ்வதி” தேவியர்களின் சன்னிதி கட்டப்பட்டு, மூல மூர்த்தி மற்றும் மகாகாளி விக்ரகங்களின் நடுவே “ஸ்ரீயந்திரம்” ஸ்தாபிக்கப்பட்டது.



## கோயிலின் கட்டிடக்கலை :

இக்கோயில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பஞ்சகங்கா நதிக்கரையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் சுமார் 6000 வருடங்கள் பழமையா னது. பல அரச குடும்பத்தினரால் பரந்த இடத்தில்





கட்டப்பட்டுள்ள இக்கோயில், ஹேமந்த்பந்தி கட்டிடக் கலையை பிரதிபலிக்கும் வகையில் அழகிய சிற்பங்களுடன் காணப்படுகிறது. நான்கு திசைகளில் நான்கு நுழைவாயில்களும், ஐந்து கோபுரங்களுக்குக் கீழ் இக்கோயில் அமைந்துள்ளது. நான்கு திசைகளில் நான்கு கோபுரமும், மையப் பகுதியில் ஒரு கோபுரமும் உள்ளது.

இவற்றில் கிழக்கு கோபுரத்தின் கீழ் மகாலக்ஷ்மி வீற்றுள்ளாள். அதாவது நடுவில் குமார மண்டபம், கிழக்கில் – மகாலக்ஷ்மி தேவி, மேற்கில் – கணபதி; வடக்கில் – மகா காளி; தெற்கில் – மகா சரஸ்வதி; மேலும் வேங்கடேஸ்வரர், ராதா கிருஷ்ணர், கால பைரவர், விநாயகர், சிம்மவாகிணி, துல்ஜா பவானி, நவகிரகங்கள் சன்னிதிகளும் இக்கோயிலில் அமைந்துள்ளன.



## வழிபாடு மற்றும் தரிசனம் :

தினமும் ஐந்து கால வழிபாடு செய்யப்படுகின்றன. அவையாவன : காலை சுப்ர பாதம் துவங்கி, காகட ஆரத்தி, பின் 8 மணி மகாபூஜை, நண்பகல், மாலை பூஜை, இரவு ஷேஜ ஆர்த்தி, வெள்ளிக்கிழமை லக்ஷ்மி தேவிக்கு சிறப்பு பூஜைகளும், சித்திரா பௌர்ணமி மற்றும் தசரா விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. வெள்ளிக்கிழமைதோறும் தேவியின் உத்ஸவ மூர்த்தியை திருமாட வீதிகளில் எழுந்தருளச் செய்வர்.

## தேவி மஹாத்மியம் கூறுவது என்ன? :

மகாலக்ஷ்மி ஒன்பது வடிவங்களில் காட்சியளிக்கிறாள். அவையாவன : மஹிஷா சுரமர்தினி, யோகீந்திரா (மகாகாளி), கௌஷிகி (மகாவித்யா), சுநந்தா (விந்திய வாசினி), ரக்ததந்திக, சாகம்பரி (தானிய லக்ஷ்மி), துர்கா, பீமா மற்றும் ப்ரமரி.



## ஸ்ரீமகாலக்ஷ்மி ஸ்ரீநிவாசன் :

மகாவிஷ்ணுவின் மனைவியான ஸ்ரீமகாலக்ஷ்மி, சத்தியம் மற்றும் தர்மத்தின் உருவமாய், பிரபஞ்சத்தின் உருவமாய் உள்ள மகாவிஷ்ணுவில் அஷ்டலக்ஷ்மியாக வசிக்கிறாள். அதாவது – பகவானின் உடம்பு – பாக்கிய லக்ஷ்மி, இரு கைகளில் – தானிய லக்ஷ்மி, இரு புஜங்கள் – வீர லக்ஷ்மி, இதயம் – பூத காருண்ய லக்ஷ்மி, சத்தியம் – கீர்த்தி லக்ஷ்மி, சாந்த குணம் – சௌம்ய லக்ஷ்மி, நந்தகம் எனும் வாள் – சௌர்ய லக்ஷ்மி, முழு உருவம் – சர்வ சாம் ராஜ்ய லக்ஷ்மி. இங்ஙனே லக்ஷ்மி தேவி மஹா விஷ்ணுவில் வசிப்பதால், பகவான் "ஸ்ரீமகாலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்" எனவும் அழைக்கப்படுகின்றார். எனவே பக்தர்கள் அனைவரும் இக்கோயிலுக்குச் சென்று தேவியின் அருளைப் பெறுவீர்களாக.





# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## வ்ருத்ராசுரன் கதை



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

வ்ருத்ராசுரனின் சரித்திரம் ஸ்ரீமத் பாகவதத்தில் ஆறாம் ஸ்கந்தத்தில் அமைந்துள்ளது. தேவகுருவான பிரகஸ்பதி தேவர்களை விடுத்து சென்றபோது, அசுரர்கள் தேவர்களை மிகவும் எளிமையாக வென்றார்கள். தங்கள் குரு இல்லாத காரணத்தால் தேவர்கள் மிக மோசமான தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது. அப்பொழுது பிரம்ம தேவரின் ஆலோசனைப்படி தேவர்கள் விஸ்வரூபனை புரோஹிதனாக ஏற்றுக் கொண்டு தங்களுடைய இழந்த முந்தைய நிலையை அடைந்தார்கள். இருந்தபோதும் விஸ்வரூபன் வேள்வி செய்யும்போது தேவர்களின் பெயர்கள் மட்டுமல்லாது மறைமுகமாக அசுரர்களின் பெயரைச் சொல்லியும் அவிர்ப்பாகம் அர்ப்பணம் செய்ததைக் கண்டு மிகவும் கோபம் கொண்ட இந்திரன் அவனைக் கொன்று விட்டான். அதனால் பிரம்மஹத்தி தோஷமானது இந்திரனைப் பிடித்தது. பிறகு அந்த பிரம்மஹத்தி தோஷத் திலிருந்து பல சிரமங்களை எதிர்கொண்டு மீண்டான்.

விஸ்வரூபன் இப்படியாக இந்திரனால் கொல்லப்பட்டது அவனுடைய தந்தையான துவஷ்டாவுக்கு மிகவும் வருத்தத்தையும் துக்கத்தையும் உண்டாக்கியது. விஸ்வரூபனின் தந்தை தன் மகன் மரணத்திற்குக் காரணமானவனைப் பழி தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, இந்திரனைக் கொல்வதற்காக பலசாலியான ஒருவனை உருவாக்க வேண்டும் என்று ஒரு மகா வேள்வியை தொடங்கினான். அந்த வேள்வித் தீயிலிருந்து பிரளய கால ருத்திரன் போன்ற பயங்கரமான தோற்றத்தோடு மலை போன்ற பருமனும், கரிய நிற மும், உருக்கி வார்த்த செம்பைப் போன்ற சிவந்த ரோமங்களும், எதிர்த்து நோக்க முடியாத சிவந்த விழிகளும் உடையவனாக வ்ருத்ராசுரன் தோன்றினான். அந்த அசுரனைக் கண்டவுடன் எல்லோரும் பயந்து ஓடத் தொடங்கினார்கள். இந்திரன் முதலான தேவர்கள் வீரத்தோடு தங்கள் ஆயுதங்கள் கொண்டு போர் செய்தனர். ஆனால், அந்த அசுரன் அவர்களுடைய ஆயுதங்கள் அனைத்தையும் விளையாட்டாகப் பிடித்து விழுங்கி விட்டான். அதைக் கண்டு தேவர்கள் மிகவும் சோர்ந்து போனார்கள். அப்பொழுது அவர்கள் தங்களுடைய தேவாதி தேவனாகிய இறைவனிடம் சென்று சரண மடைந்தனர்.

தேவர்கள் இறைவனை வேண்டிக் கொள்ள, நான்கு திருக் கரங்களுடன் வைகுண்டவாசியான நாராயணன் காட்சியளித்து அவர்களுக்கு இவ்விதமாக உபேதசம் செய்தார்!

"தேவர்களே! நான் காட்சி கொடுத்தாலே மனிதர்களுக்குத் துன்பம் என்பதே ஒன்றும் இருக்காது. இருந்தாலும் என்னை நினைத்து துதிப்பவர்கள் பக்தி யோகத்தை தவிர வேறொன்றையும் வேண்டுவதில்லை. இந்திரனே! நீங்கள் இப்பொழுது ததீசி முனிவரிடம் செல்லுங்கள். தவவலிமையால் அவர் உடல் மிகவும் உறுதி

வாய்ந்ததாகும். எனவே நீங்கள் அவரு டைய உடலை யாசியுங்கள். அவர் எவ்வளவு சக்தி பெற்ற வர் என்பதற்கு அஸ்வினி குமாரர்களே சாட்சியாக விளங்குகின்றனர். அந்த ததீசியே நாராயண கவசத்தை துவஷ்டாவுக்கு கொடுத்தது. துவஷ்டாவின் மூலமாக அந்த கவசத்தை விஸ்வரூபன் பெற்றான்.

விஸ்வரூபன் மூலமாக அந்த நாராயண கவசத்தை நீங்கள் பெற்று அசுரர்களை வெற்றிக் கொண்டீர்கள். நாராயண கவசத் தின் மகிமையால்தான் ததீசி உடல் மிகவும் உறுதி வாய்ந் ததாக உள்ளது. உங்களுக்காக வேண்டி அஸ்வினி குமாரர்கள் அவரிடம் யாசித்தால் நிச்சயமாக அவர் தன் உடலை கொடுப்பார். அவர் தர்மசீலர். எனவே இதில் எந்தவொரு ஐயப்பாடுமில்லை. அவருடைய உடலில் உள்ள எலும்புகளைக் கொண்டு வஜ்ஜிராயுதத்தை விஷ்வ கர்மாவால் செய்ய முடியும். அதன் மூலமாகவே வ்ருத்ராசுரனின் வதம் சாத்திய மாகும். அந்த அசுரன் மாண்ட பின்பு, நீங்கள் இழந்த ஆயுதங்கள் எல்லாம் மீண்டும் பெறுவீர்கள்.

இவ்வாறு இறைவன் தேவர்களுக்கு உபதேசம் செய்த உடனே அங்கிருந்து மறைந்தார். பின்பு தேவர்கள் ததீசி முனிவரிடம் சென்று அவருடைய உடலை தருமாறு வேண்டிக் கொண்டனர். அதுமட்டுமின்றி தேவர்கள் அவருக்கு தர்மோபதேசம் செய்தார்கள். முனிவரும் தேவர்களிடமிருந்து தர்மோபதேசம் கேட்பதற்காகவே காத்திருந்ததைப் போன்று மிகவும் மகிழ்ந்தார். பின்பு தேவர்களின் விருப்பப்படி ஆத்மாவை இறைவனுடைய திருவடியில் சரண்புகச் செய்து, தன் உடலை விட்டுப் பிரிந்தார்.

பின்பு ததீசி எலும்புகளைக் கொண்டு விஷ்வ கர்மா வஜ்ஜிராயுதத்தை உருவாக்கினான். அந்த வஜ்ஜிராயு தத்தை தரித்தமாத்திரத்தில் இந்திரன் மிகவும் ஒளி மயமா னவனாய் விளங்கினான். இந்திரன் தன் யானை யான ஐராவதத்தின் மீதேறி தேவர்கள் புடை சூழ வ்ருத் ராசுரன் மீது போர் செய்தான். தேவர்கள் வஜ்ஜிராயுதம் கொண்டு கடும்போர் செய்ய, அதற்கு நிகராக அசுரர் களும் தங்களி டம் இருக்கும் ஆயுதங்கள் கொண்டு அவர்களைத் தாக்கி னார்கள். இருப்பினும் தேவர்களின் தாக்குதலை தாங்க முடியாமல் அசுரர்கள் தன் தலை வனை விட்டு விட்டு ஓடத் தொடங்கினார்கள். அதைக் கண்ட வ்ருத்ராசுரன் சிரித்துக் கொண்டே இவ்வாறாகக் கூறினான்.

“அசுர வீரர்களே! நான் சொல்வதை கேளுங்கள். மரணம் என்பது இவ்வுலகில் உறுதியானது. எனவே வீர மரணத்திற்காக நீங்கள் போராடுங்கள். எதிரிகளுக்குப் புற முதுகுக் காட்டாமல் வீரமரணம் எய்துவது என்பது சொர்க்கத்திற்குச் செல்லும் வழி என்பதை உணருங்கள்” என்றான்.

வ்ருத்ராசுரனின் வார்த்தைகளை அசுரர்கள் எவரும் செவிமடுக்கவில்லை. அதைக் கண்டு மிகவும் கோபம் கொண்டவனாய் கர்ஜித்தபடி தேவர்கள் மீது பாய்ந்தான். அதைக்கண்ட தேவர்கள் சற்று அஞ்சினர். அப்பொழுது வ்ருத்ராசுரனுக்கும் இந்திரனுக்கும் இடையில் கடுமை யான போர் நடைபெற்றது. அசுரன் தயை தாட் சண்யம் இல்லாமல் தேவர்களை தன் பாதங்களின் கீழ் வீழ்ந்து நசுக்கி அழித்தவாறு முன்னேறிக் கொண்டி ருந்தான். அப்பொழுது. இந்திரன் வஜ்ஜிராயுதத்தால் வ்ருத்ராசுர னின் இரண்டு கைகளையும் துண்டித்தான். அவன் பெரி தாகத் தன் வாயைத் திறந்து ஐராவதத்தோடு இந்தி ரனையும் விழுங்கி விட்டான். அவ்வாறு விழுங்கிய பின் பும் நாராயண கவசத்தை தரித்தவனாகிய இந்திரன் மரணமெய்தவில்லை.

இந்திரன் தன் கையில் இருந்த வஜ்ஜிராயுதத்தால் அசுரனின் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியே வந்தான். வெளியில் வந்த இந்திரன் அசுரனின் தலையை வெட்டி வீழ்த்தினான். ஆனால் அசுரனின் தலையை வெட்டி வீழ்த்துவதற்கு இந்திரனுக்கு ஒரு வருட காலம் வேண்டியதாயிற்று. வ்ருத்ராசுரனின் தலை பூமியின் மீது வீழ்ந்தவுடன் தேவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். ஆகாயத்தி லிருந்து பூமாரி பொழிந்தது. அப்பொழுது வ்ருத்ராசுர னின் உடலிலிருந்து ஆத்மஜோதி வெளியில் வந்து அனை வரும் பார்த்துக் கொண்டிருக்கையில் வைகுண்டத்தை நோக்கி அது பயணித்தது. அவ்வாறாக அந்த ஆத்மா திவ்விய லோகத்திற்குச் சென்று சேர்ந்தது.

வ்ருத்ராசுரனின் வதம் செய்த கதை, இந்திரனின் பாவவிமோசனம் பெற்ற விதத்தை கேட்பதின் மூலமாக வும் மனிதர்கள் எல்லா பாவங்களிலிருந்து விடுதலைப் பெற்றவர்கள் ஆகின்றனர். எனவேதான் பண்டிதர்கள் இதை எப்பொழுதும் படித்தவாறு இருப்பார்கள். இத னால் எல்லா நன்மைகள் ஏற்படுவதோடு, பாவ விமோச னமும், எதிரிகளை வெற்றிக் கொள்வதும், ஆயுள் வளர்ச்சியும் உண்டாகும்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**திருமங்கையாழ்வார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

(வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன்) – வாட்கலியன் – திருக்கையிலே மருவி இருக்கிற வாளையுடையவர். பகைவர்களை அழிக்கும் தன்மையதான வாளை உடையவர். குமுதவல்லி நியமனத்தின் பேரில் தினமும் தனிகர்களைக் கொள்ளையடித்து ஆயிரத்தெட்டு பாகவதர்களுக்கு ததீயாராதனம் செய்து வந்த ஆழ்வார், எம்பெருமானும் பிராட்டியும் புதுமண தம்பதியாக அந்தணர் கோலம் பூண்டு, விசேஷமான திருவாபரணங்களை அணிந்து வந்தனர்.

அவர்களை வளைத்து ஆடை ஆபரணங்களை எல்லாம் பறிக்கையில் அம்மணமகள் காலில் அணிந்த கணையாழி மோதிரத்தைக் கழற்ற முடியாமையால், அதையும் விடாமல் பற்களாலே கடிக்கத் தொடங்கினார் ஆழ்வார். அம்மிடுக்கைக்கண்ட அந்தணர் உருவில் வந்த எம்பெருமான் கலியனோ என்று அழைத்தார். அதனால் ஆழ்வாருக்குக் கலியன் – பலமுடையவன் என்ற சிறப்புப் பெயர். மேலும் அந்த அந்தணரிடமிருந்து பறித்த செல்வம் மலைபோல் அசைக்க முடியாமல் இருந்ததால், கோபம் அடைந்தவராய் அவ்வந்தணர் உருவில் வந்த எம்பெருமானைக் கத்தியைக் காட்டி பயமுறுத்தினார்.

அதனால் அந்தணரும் ஆழ்வாருக்கு திருவஷ்டாக்ஷர மந்த்ரோபதேசம் செய்தார். இது பற்றியே வாட்கலியன் என்ற பெயர் பெற்றபடி. இது பற்றியே ***''தென்னரங்கன் தன்னை வழிபறித்த வாளன்''*** என்பர் பிள்ளை உறங்காவில்லி தாஸர். அதனை மெய்ப்பிக்கும் வகையில் ***''வாடினேன் வாடி... நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்''*** என்ற பதிகம் பாடினார். ***''மங்கையார் வாட்கலிகன்றி''*** என்பதற்குச் சேர "பகவத் ஸம்பந்தத்தை உணர்ந்தவர்கள் பகவத் ஸம்பந்தமே பலமாயிருக்குமாபோலே திருமங்கையில் உள்ளவர்கள் ஆழ்வார் கையிலே வாளே தங்களுக்கு பலமாக நினைத்திருப்பது'' என்று பெரியவாச்சான் பிள்ளை உரைப்பர். இவரை நற்கலியன் என்று கொண்டாடுவர் மாமுனிகள்.

அதாவது எம்பெருமானுக்கு எல்லையான பாகவதர்களுக்கு அடிமையாம் தன்மையிலே ஊன்றி, மற்றை ஆழ்வார்கள் திருவடிகளில் அடிமையே தமக்கு அடையாளமாம்படியாக எண்ணி இருக்கிற நன்மையையுடையவராய், எம்பெருமானிடம் அருகாழி உள்ளாக கவருகையாலே கலியன் என்று நிரூபிக்கும் படியான பிரிதொன்றுக்கில்லாச் சிறப்புடையவர் என்றவாறு.



## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத் திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.
- திருமலை நடைபாதையில் நடந்துச் செல்லும் போது பக்தர்கள் குழுவாகச் செல்லவும்.

பரகாலன் – எதிரிட்ட பகைவர்கள் தலை எடாதே அமுங்கும்படி பண்ணுபவர். பகைவர்களுக்கு வந்து அணுகாதபடி சிம்மம் போலே அநபிபவ நீயரானவர். ஆயுத வித்யைகளில் தேர்ச்சி பெற்று சோழராஜனிடம் சேனாதிபதியாய் அமர்ந்து, பல போர்களில் வெற்றி பெற்று "பரகாலன்" – எதிரிகளுக்கு யமன் போன்றவர் என்ற புகழ் பெற்றவர்.

பட்டர் அருளிய வடமொழி தனியனில் "பரகால" என்பதற்குச் சேர எம்பெருமானுக்குப் பகைவர்களான வேதத்தை மறுப்பவர்களை தோள் வலியாலும் அழித்து அதற்கு மேலே சாஸ்திரம் மூலமாக வளர்ப்பவர்களாய் வந்த பகைவர்களை தன் சொல்லாலும் ஆயுதத்தாலும் அழித்து அரங்கநகர் மணி மண்டபங்களைக் கட்டின கைங்கர்யங்களையும், *"அரங்க மாலைச் சொல்லினேன் தொல்லை நாமம்"*, என்று வாக்கின் கைங்கர்யங்களையும் செய்து வந்தவரா கையாலே பரகாலனானார். மங்கையர்கோன் – இப்படிப்பட்ட வீரத்தை மதித்த அரசன் இவ்வாழ்வாரை திருமங்கை நாட்டுக்கு மன்னனாக்கித் தன் கீழ் சிற்றரசனாம்படி முடி சூட்டியதாலே மங்கையர்கோன் என்றபடி. *"பொங்குபுகழ் மங்கையர்கோன்"* என்று எம்பார் அருளியதற்கு ஏற்ப மிக்க வளப்பமான புகழையுடைய திருமங்கைக்குத் தலைவர் ஆழ்வார் என்பர். மேலும் மாமுனிகளும் *"மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கம் கூற அவதரித்தவர்"* என்பர்.

அதாவது நம்மாழ்வார் அருளின தமிழ் வேத நான்கின் தொகைக்கும் இவ்வாழ்வார் பிரபந்தங்களான ஆறு அங்கங்களான பிரபந்தங்களை அருளும்படி அவதரித்தவர் மங்கையர்கோன் ஆவர். இது பற்றியே *"இருந்தமிழ் நூற்புலவன் மங்கையாளன்"* என்பதற்குச் சேர ஒருவரால் கரைகாண முடியாதபடி இருக்கிற தமிழ் மாலையாகிய சாஸ்த்ரத்தைக் கரை கண்ட ஞானத்தின் மிகுதியையுடையவர் திருமங்கையாழ்வார் என்று ஆசார்ய இருதய உரையில் அருளுவர் மாமுனிகள்.

மேலும் மாமுனிகள் உபதேச ரத்ன மாலையில் *"வாய்த்த புகழ் மங்கையர்கோன்"* என்பதற்குச் சேர இவருக்குப் புகழ் வாழ்க்கையாவது – எம்பெருமானிடமிருந்து பெற்ற திருமந்திர லாபமன்றோ. இத்தகைய பெருமை படைத்த திருமங்கையாழ்வார் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 43க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பு | லி | யூ | ர் | ம் | க | ங் | 2 சி | 3 தி |
| ரு | | 4 வா | 5 ஸ்ரீ | க | றா | யி | 6 க | 7 வி | மி | | ரு |
| க் | 8 வா | ன | 9 க | ண் | ண | ன் | | யூ | 10 பூ | | க் |
| கோ | ள் | மா | ரு | பெ | த | ந் | ள | க | ல | 11 உ | கோ |
| வ | க | ம | ட | 12 ச | க் | க | ர | ம் | | | ட் |
| லூ | னி | லை | சே | | 13 வெ | ள் | ளி | ய | ங் | கு | டி |
| ர் | மு | | வை | | ள் | க | ர் | ர | சு | 14 அ | யூ |
| | 15 மா | | | 16 கு | ல | சே | க | ரா | ழ் | வா | ர் |
| 17 அ | லி | பி | ரி | | வி | தே | ரா | த் | ப | 18 சு | ண |
| வ | | ள் | க | ரி | சூ | ய | த் | 19 நி | | | ரோ |
| ந் | ம் | ண | ரா | பு | ச | டே | க | ங் | வெ | 20 ஸ்ரீ | 21 து |
| தி | | | | ர் | யூ | டி | ண் | க | க் | ரு | 22 தி |

46

# 108 திவ்விய தேசவைபவம்



# திருப்புல்லாணி

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

புல்லர் என்கிற மஹரிஷி இங்கு உள்ள அரசமரத்து அடியில் இருந்து தவம் புரிந்து, பகவானை சேவிக்கும் பாக்யத்தைப் பெற்றார். அவருடைய பிரார்த்தனைக்கு ஏற்ப, பகவான் இங்கு நித்ய சாந்நித்யம் செய்துள்ளார்.

தேவலர் என்கிற மஹரிஷி தவம் செய்தபோது, சில தேவமாதர்கள் இவர்கள் தவத்தைக் கலைக்க முயற்சிக்க, முனிவர், இவர்கள் விலைமாதராக ஆகுமாறு சபிக்க, தவறை உணர்ந்த அவர்கள் பிழை பொறுக்க வேண்ட, முனிவர் இங்கு புல்லர் என்கிற மஹரிஷியைச் சரண் அடையச் சொல்ல, இந்த ரிஷியும், விரைவில் இங்கு இராமபிரான் வர இருக்கிறார். அதுவரை இந்த ஆதி ஜகன்னாதனை தரிசித்து இருக்கச் சொல்ல, தேவமாதர்களும் அங்ஙனமே ஆதி ஜகன்னாதரை வழிபட்டு வந்தனர்.

கண்வர் என்கிற ரிஷியும், அசரீரியின் சொற்படி, ஸ்ரீராமனின் வரவுக்காக இங்கு காத்திருந்தார். இராமபிரான், சீதையைத் தேடிக் கொண்டு இங்கு வந்தான். இங்குதான், விபீஷண சரணாகதி நடந்தது. ராமசரமச் லோகம் கடற்கரை வார்த்தையாயிற்று. சரணாகதியைத் தானே அனுஷ்டித்துக் காட்டிய இடமும் இதுவே (சமுத்ர ராஜனையே, ஸ்ரீராமன் சரணம் என்று அடைந்தது.)

இந்த எம்பெருமான் ஆதி ஜகன்னாதரை வேண்டி, ராமன், ராவணனை அழிக்க சக்தியுள்ள வில்லை இங்குதான் பெற்றுக் கொண்டான் என்பர். இவர் வில்லை வழங்கியதால் தெய்வச்சிலையார் ஆனார். பெருமானான ஸ்ரீராமனே வணங்கியதால், ஆதிஜகன்னாதர் பெரிய பெருமாள் ஆனார்.

ஸ்ரீராமனின் திருத்தகப்பனார் தசரதன் இத்தலத்தில், புத்திரப்பேறு வேண்டி, இப்பெருமாளை நோக்கி, யாகம் செய்திருக்கிறார்.

ஸ்ரீராமன், சமுத்ரராஜனை நோக்கி 7 நாட்கள் விரதம் இருந்த இடமும் இதுவே. தர்ப்பத்தைப் படுக்கையாக விரித்து அதில் சயனித்து, சமுத்ரராஜனை, கடலில் அணை கட்ட அழைத்தார். அதனால் இவர், இங்கு தர்ப்ப சயனராமன் எனப்படுகிறார். தனி சந்நிதி – அழகிய சயனத்திருக்கோலம் – 7 நாட்கள் ஆகியும் சமுத்ர ராஜன் நேரில் வராத போது கோபம் கொண்டு, தன் கணையால் சமுத்ரத்தை வற்ற முயற்சித்துபோது, சமுத்ரராஜன் அவரைச் சரண் அடைந்ததும் இங்கேதான். தேவமாதர்கள் எழுவர்: கண்வரிஷி முதலியோரும் ஸ்ரீராமனை இங்கு சேவித்து அவர் அருள் பெற்றனர். புல்லில் படுத்து, கடலில் அணை தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததால் இது திருப்புல்லணை, பிறகு இது மருவி திருப்புல்லாணி எனப்படுகிறது.

இன்னொரு தனி சந்நிதியில் பட்டாபிஷேக ஸ்ரீராமனையும் புஷ்பக விமானத்தில், இளவலுடன்

சேவிக்கலாம். பெருமாள் சந்நிதியின் பின்புறம் உள்ள அரசமரம் பிரசித்தி பெற்றது. இந்த மரமே அச்வத்த நாராயணன் என்று கொண்டாடப்படுகிறது.

இங்குள்ள சக்ரதீர்த்தம் சக்கரத்தாழ்வாரால் பெருமை பெற்ற தீர்த்தம்.

**சிறப்புகள் :**

சரணாகதி தர்மம் என்பதை ஸ்ரீராமன், அநுஷ்டித்துக் காட்டிய தலம். ராம சரமச்லோகம் பிறந்தது இங்குதான். தர்ப்பசயனப் பெருமாள் சந்நிதியில், லக்ஷ்மணன் ஆதி சேஷனாக, கைங்கர்யம் செய்வது ஒப்பற்ற காட்சி. பட்டா பிராமன் சந்நிதியில் மானிட உருவத்தில் பணி செய்கிறான்.

அருகில் சமுத்ரம் – இலங்கைக்குச் செல்ல இங்கிருந்து தான் வானரர்களால் சமுத்ரத்தில் அணை கட்டப்பட்டது. இது ஆதி – சேது – சேதுக்கரை

| | |
|---|---|
| பெருமாள் | – ஆதி ஜகந்நாதப் பெருமாள் (கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம், தெய்வச் சிலையார் என்றும் அழைப்பர்). ஸ்ரீராமன் (கிழக்கு நோக்கி, தர்ப்ப படுக்கையில் சயனம்) சுற்றுப் பிராகாரத்தில் வலப் பக்கம் ஸ்ரீபட்டாபிராமன் சந்நிதி, தர்ப்பசயனப் பெருமாள் சந்நிதி. |
| உற்சவர் | – கல்யாண ஜகன்நாதன். |
| தாயார் | – கல்யாணவல்லி, பத்மாவதி – – இரு தாயார். |
| புஷ்கரணி | – ஹேம புஷ்கரணி. |
| விமானம் | – கல்யாண விமானம், ஸ்வஸ்திக விமானம். |
| தீர்த்தம் | – சக்ர தீர்த்தம், ரத்னாகர சமுத்ரம். |
| தல விருக்ஷம் | – அச்வத்தம். |
| ப்ரத்யக்ஷம் | – அச்வத்த நாராயணன், சமுத்ரராஜன், புல்லாரண்ய ரிஷி. |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – திருமங்கை ஆழ்வார். |
| விசேஷம் | – நாகதோஷம் உள்ளவர்கள் இந்த க்ஷேத்ரத்தில் சாந்தி செய்து கொள்வதும், பித்ரு தோஷத்துக்காகப் பரிகார ஹோமம் செய்து கொள்வதும் வரலாற்று முக்யத்துவம் பெற்று, இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது. இங்கு திருப்புல்லாணி பாயஸம் பகவானுக்கு நிவேதனம் செய்வது மிக விசேஷம். ராமநாத புரத்தில் இருந்து போகும் வழியில் நவபாக்ஷாணம் என்கிற இடத்தில் அதிகாலை அங்கு சமுத்திரத்தில் தீர்த்தமாடி, நவக்ரகங்களை தரிசித்து உடனே அங்கிருந்து புறப்பட்டு திருப்புல்லாணி சேதுக்கரை வந்து ஸ்நானம் செய்து கோயிலுக்கு வந்து ஹோமம் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. |

### த்யான சுலோகம்

*புல்லாரண்யதலேது தர்ப்பசயந: பத்மாஸநா வல்லபா*
*தீர்த்தம் சக்ர ஸரோ விமாந மபிதத் கல்யாண நாமோஜ்ஜ்வலம் ।*
*ராமத்வே சரணா கதோத்ர ஜலதி: தஸ்மிந் ஜகந்நாததாம்*
*பிப்ரந் இந்த்ர திசா முகோ ஜலதிநா ஸம்ஸேவிதோ ராஜதே ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*வேதமும் வேள்வியும் விண்ணும் இருசுடரும்*
*ஆதியும் ஆனான் அருள் தந்தவா! நமக்கு,*
*போதலரும் புன்னை சூழ் புல்லாணி கைதொழுதேன்*
*ஓதமும் நானும் உறங்காது இருந்தேனே.*

– திருமங்கை ஆழ்வார்

*மதயானைக் கோள் விடுத்து மாமுதலை கொன்ற*
*கதையால் இதயம் கரையும் - முதலாய*
*புல்லாணி மாலே! புறத்தோர் புகழ் இருப்ப*
*வல்ஆணி, என் செவிக்குமாறு.*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

411. ஓம் ப்ருது: நம:

(அளவிலாப் புகழ் பெற்றவனே)

ஓம் ஸர்வ ஸேவ்யாயை நம:

(எல்லோரும் தமக்கு சேவை செய்யும்படி லகுவாக இருப்பவளே)

412. ஓம் ஹிரண்யகர்ப்ப: நம:

(பொற்புதையல் போன்றவனே)

ஓம் வராங்கநாயை நம:

(மிகச் சிறந்த வனிதையே)

413. ஓம் சத்ருக்ந நம:

(எல்லாப் பகைகளையும் அழிப்பவனே)

ஓம் கந்தத்வாராயை நம:

(அழகிய வாசனைப் பொருள்களால் செய்யும் பூஜை, தம்மை அடையுமாறு செய்பவளே)

414. ஓம் வ்யாப்த: நம:

(எல்லோரிடமும் சமமாகப் பரவி இருப்பவனே)

ஓம் துராதர்ஷாயை நம:

(வேறு வழியில் அணுக முடியாதவளே)

415. ஓம் வாயு: நம:

(தம்மைத் தியானிப்பவர்களைத் தேடிச் செல்பவனே)

ஓம் நித்யபுஷ்டாயை நம:

(எல்லாவற்றையும், எல்லோரையும் புஷ்டியுடன் இருக்கச் செய்பவளே)

416. ஓம் அதோஹஜ: நம:

(எவ்வளவு அனுபவித்தாலும் குன்றாத மகிமை உள்ளவனே)

ஓம் கரீஷிண்யை நம:

(அடியவர்களின் நிலங்களில் பலன் வரும்படி செய்பவளே)

417. ஓம் ருது: நம:

(அனைவரையும் மகிழ்விக்கும் குணங்கள் உள்ளவனே)

ஓம் தேவஜுஷ்டாயை நம:

(தேவஸ்வபாபம் உள்ளவர்களால் அடையப் படுபவளே)

418. ஓம் ஸுதர்ஸன: நம:

(அழகிய திருமேனியுடன் சேவை சாதிப்பவனே)

ஓம் ஆதித்யவர்ணாயை நம:

(பாலஸுர்யன் போன்ற வர்ணமுள்ளவளே)

419. ஓம் கால: நம:

(எல்லாவற்றையும் தன்னுடன் சேர்த்துக் கொள்பவனே)

ஓம் திவ்ய கந்தாயை நம:

(உயர்ந்த நறுமணத்தின் இருப்பிடமே)

420. ஓம் பரமேஷ்டீ நம:

(பரமபத வாசியே)

ஓம் ஸுஹ்ருத்தமாயை நம:

(மிகவும் நல்ல எண்ணம் உள்ளவர்களுள் சிறந்தவளே)

ஸ்ரீமதே கல்யாணவல்லீ, பத்மாஸநீ ஸமேதாய
ஸ்ரீஆதிஜகந்நாதாய திவ்ய தனுஷ்காய பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீதர்ப்பசயன பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீபாலக்ருஷ்ண ஸ்வாமிநே நம:
ஸ்ரீபட்டாபிராமாய பரப்ரஹ்மணே நம:

இராமநாதபுரம் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே சுமார் 10 கி.மி. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## 2020, ஏப்ரல் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 2 | ஸ்ரீராம நவமி |
| 2-10 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 3 | திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம் |
| 5-7 | திருமலையப்ப ஸ்வாமி வசந்தோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 7 | தும்புரு தீர்த்த முக்கோட்டி |
| 13-15 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி வசந்தோத்ஸவம் |
| 14 | தமிழ் வருட பிறப்பு |
| 25 | பரசுராம ஜெயந்தி |
| 27 | சங்கர ஜெயந்தி |
| 28 | இராமானுஜர் ஜெயந்தி |
| 29 | முதலியாண்டான் திருநட்சத்திரம் |



பகவத் கீதை – இளைய சமுதாயம்

# அசுர குணத்தால் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

தெய்வீக குணம், அசுர குணம் என இரண்டு குணங்கள் உள்ளன. பகவானின் கோட்பாடுகளை, கட்டளைகளை கடைபிடிப்பவர்கள் தேவதைகள் அல்லது தெய்வீக குணங்களை உடையோராவர். பகவானின் கோட்பாடுகளுக்கு எதிர்மறையாகவோ அல்லது எதிர்த்து நடப்பவர்கள் அசுர குணமுடையோராவர்.

எந்தவொரு தேசத்திலும் அரசின் சட்டங்களை கடைபிடிப்பவர்களும், அச்சட்டத்தை எதிர்ப்பவர்களும் வாழ்ந்து கொண்டுதான் உள்ளனர். அரசின் சட்டங்களை கடைபிடிப்போர் நாகரீக குடிமக்களாவர். அதுவே சட்டத்தை எதிர்ப்பவர்கள் அநாகரீக குற்றவாளிகளாவர். சட்டத்திற்கு அனுகூலமாக வாழ்வோர் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக வாழ்வோர் ஒரு நாள் எல்லைக்கு வெளியே இருக்கப் போகிறார்கள். பகவத்கீதை (16.5) இதனை வெளிப்படையாகக் கூறும் போது “தெய்வீக குணங்கள் மோட்சத்திற்கு வழி வகுக்கின்றன. ஆனால் அசுர குணம் பந்தத்திற்கு அனுகூலமாக இருக்கும். ஓ பாண்டவ புத்திரா! நீ தெய்வீக குணத்துடன் பிறந்திருக்கின்றாய். ஆகவே வருந்தாதே” என்கிறது.

தெய்வீக குணத்தில் முதன்மையானது பயமின்றி இருத்தல். மனிதனுக்கு தோல்வியை அளிப்பது பயமே யாகும். எப்பொழுது பயம் இதயத்திற்குள் நுழைகின்றதோ, அப்பொழுதே தோல்வியும் ஆரம்பமாகின்றது. மனிதனிடம் உடல் பலம் குறைவாக இருந்தாலும் மலையளவு ஆத்ம பலம் இருந்தால் எச்செயலையும் செய்து சாதித்து விடுவான். அசுர குணங்களில் முதன்மையானது கர்வம். கர்வம் என்பது பல காரணங்களால் வருகின்றது. அழகு, பணம், பலம், நன்மதிப்பு இவற்றினால் கர்வங்கள் உண்டாகின்றன. ஆனால் இந்த கர்வத்திற்குக் காரணமானவைகள் நொடிப்பொழுதில் அழியக் கூடியவைகளாகும். அசுரர்கள் தங்களது தபோ சக்தியால் தேவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தியதாக சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. வரலாற்றில் பலர் நிரந்தரமாக நிலை பெற்றும், பலர் இருந்த இடம் தெரியாமலும் அழிந்துள்ளனர். அவர்களில் சிலருடைய பெயர்களே இன்றும் மக்களிடையே வரலாற்று அளவில் பேசப்பட்டு வருகின்றது. அதுவே, அசுரர்களின் பெயர்கள் நிரந்தரமாக நிலைக்கவில்லை. அசுர குணங்களில் இரண்டாவது திமிர், மூன்றாவது அகங்காரம், நான்கா

## வாசகர்களுக்கு அறிவிப்பு

பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும். நீங்கள் கீழ் குறிப்பிட்ட விவரங்களை தொலைபேசி யில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

வது கோபம், ஐந்தாவது தற்பெருமை. இந்த ஐந்து அசுர குணங்கள் அஞ்ஞானத்தால் பிறக்கின்றன. அஞ்ஞானம் என்றால் நிதர்சன ஞானம் இன்றி இருத்தலாகும். ஒளி இன்றி இருத்தலே இருளுக்குக் காரணமாவது போன்று, ஞானமின்றி இருத்தலே அஞ்ஞானத்திற்குக் காரணமாகின்றது. இந்த அசுர குணங்களினால் கர்வம் உண்டாகின்றது. கூண்டில் சிக்கிய கிளியோ, கூண்டில் சிக்கிய எலியோ, சிறைச்சாலையில் இருக்கும் கைதியோ சுதந் திரமாக இருக்க முடியாது அல்லவா, அது போன்றே கர்வத்தை உண்டாக்கும் அசுரகுணம் எந்நாளும் மகிழ்ச்சியை அளிக்காது. எனவே யாருக்கு தெய்வீக குணமுள்ளதோ அவர்களுக்கு தடைகள் ஏற்படினும் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏதாவது ஒரு நாள் அவர்களின் துன்பம் விலகியே தீரும். பாண்டவர்கள் தெய்வீக குணம் கொண்டவர்கள். அவர்கள் பல துன்பங்களை எதிர் கொண்டாலும் இறுதியில் அவர்கள் அனைவரும் துன்பத்திலிருந்து விடுப்பட்டனர்.




யாரிடம் தெய்வீக குணம் உள்ளதோ, அவர்கள் என்றும் மகிழ்வுடனே இருப்பர். எனவே இளைஞர்கள் எப்போதும் தெய்வீக குணம் அணுகக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அது போன்றே கர்வம், திமிர், அகங்காரம், கோபம், தற்பெருமை இன்றி இருத்தல் வேண்டும். இந்த அசுர குணங்களை அடையாளம் காண சிலவற்றை கவனித்தல் வேண்டும். கல்வி, பணம், அழகு போன்றவற்றை காண்போர் திமிராக இருப்பர். கர்வம் அவர்களின் முகங்களில் காணப்படும்.

அனைவரும் தன்னை புகழ வேண்டும் என்று எண்ணுவர். மரியாதைக்குரியவராக இல்லையெனிலும் மரியாதை பெற வேண்டும் என எண்ணுவர். சிறிய செயலுக்கும் கோபமடைந்து கடுமையாகப் பேசுவர். மென்மையாகப் பேச அவர்களுக்குத் தெரியாது. எது செய்தல் வேண்டும், எது செய்தல் கூடாது என்பதும் அறிய மாட்டார்கள். அவர்கள் நம்பகமான எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தம் மனதில் பட்டதையே செய்வர். இதுபோன்ற அசுர குணங்களால் உண்மையில் துன்பப்படுதல் இருக்கும். இன்றைய இளைஞர்கள் தெய்வீக குணங்களை பெற்று அனைத்து நலன்களையும் பெறுதல் வேண்டும்.

பகவத்கீதை தொடரும்...

## தரிகொண்ட லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி



**தரிகொண்டாவில் கண்டெடுக்கப்பட்ட ஸ்வாமி தரிகொண்டா சாளக்கிராம நரசிம்மர். ஒரு கதையின்படி, ராய துர்க்கத்தில் வறட்சி நிலவிய போது பிரதிமிட்ட பாலகூயி என்ற குட்டையின் அருகில் பசுக்களை மேய்ப்பதற்காக வந்த ராமநாயன் என்ற பால்காரனின் கனவில் தோன்றி, தனக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்று ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கேட்டு, ஆலயத்தை அமைத்துக் கொண்டார் என்று கூறுவர். ஸ்வாமி கனவில் கட்டளையிட்டபடி கிராமத்தினர் லக்ஷ்மி நரசிம்மஸ்வாமி ஆலயம் அமைத்தனர். இவ்வாறாக தரிகொண்டாவில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி எழுந்தருளினார்.வாயல் பாடுவிலிருந்து (வால்மீகிபுரம்) குர்ரம் கொண்டாவிற்குச் செல்லும் வழியில் சுமார் ஐந்தாறு கி.மீ. தூரத்தில் “தரிகொண்டா” உள்ளது. இக்கிராமத்தில் வெங்கமாம்பா பிறந்து அவ்வூர் பெயரையே வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார்.மூன்றடுக்கு ராஜகோபுரத்தோடு உயரமான பிரகாரங்களோடு உள்ள ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயத்தில் ஒன்பது நாட்கள் பிரம்மோத்ஸவம் வைபவமாக நடைபெறும். இந்த ஆலயத்தின் பலிபீடத்தின் முன் நின்று யாராவது சத்தியம் செய்தால் அதை நீதி மன்றத்தில் கூட அனைவரும் ஏற்க வேண்டியதே. அத்தகைய மகிமை உடைய சத்தியத்திற்கு பெயர் பெற்ற ஆலயமே இந்த ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம்.**

இராமாயணம், மஹாபாரதம் என்ற இரண்டு இதிகாசங்களும் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் பின்பற்றப்பட வேண்டிய தர்ம நெறிமுறைகளை அழகாக எடுத்துக்காட்டி பரிணமிக்கின்றன. மனிதர்களை இயற்கையாக ஆட்டிப் படைக்கும் பலவித உணர்வுகளில், "பழிக்குப்பழி" தீர்த்துக் கொள்ள நினைத்தல் மிகவும் கொடுமையானது. உதாரணமாக மகாபாரத நிகழ்வை காண்போமா....!

துருபதனும், துரோணரும் இளம் பருவத்தில் குருகுலத்தில் ஒன்றாக கல்வி பயின்ற இணைபிரியாத நண்பர்களாவர். குருகுலவாசம் முடிந்தது. துரோணரோ ஏழை பிராமணர். துருபதனோ மாமன்னர். துரோணரிடம் தனது நட்பிற்கு அடையாளமாக நான் மன்னர் ஆனதும் உனக்கு "பாதி ராஜ்ஜியம் வேண்டுமானாலும் தருவேன்" என்று வாக்களிக்கிறான்.


ஆண்டுகள் கடந்தன. துரோணர் கிருபி என்னும் பெண்ணை மணந்து, அஸ்வத்தாமன் என்ற மகனைப் பெறுகிறார்.

ஆனால் கடுமையான வறுமையில் சொல்லொணாத்துயரத்தினை அனுபவிக்கிறார். ஒரு நிலையில் அஸ்வத்தாமனுக்கு பசிக்கு பால் கொடுப்பதற்குக் கூட வழி இல்லை. அவர் துருபத மன்னரிடம் கொண்டிருந்த நட்பினை நினைவு கொண்டு பாஞ்சாலம் சென்று, துருபதனை தர்பாரில் சந்தித்து, தனது ஏழ்மைதனை, விளக்கி, ஒரே ஒரு பசுவினை வேண்டினார். மாமன்னர் துருபதன், துரோணரைக் கண்டு அருவருப்புக் கொண்டான்.... "யார் நீ...? அடுத்த வேளை சோற்றுக்கு வழியற்ற ஒரு பிராமணன்... உனக்கும் எனக்கும் நட்பு என்று கூறுவதே எனக்கு இழுக்காகும். தர்பாரில் நீ என்னுடன் இவ்வாறு பேசினாலே என்னுடைய பெருமையும் அந்தஸ்தும் மாசுபட்டு விடும். எனது நாட்டை விட்டு வெளியேறி விடு...." என்று சுடு சொற்களால் அவரை ஏசி, கடும் வேதனைக்கு உள்ளாக்கி விட்டான்.

மனம் கொதித்தார் துரோணர். துருபதனை பழி வாங்க வெறி கொண்டார். நாட்கள் கடந்தன. பஞ்ச பாண்டவர்களுக்கு குருவாகும் வாய்ப்பு கிடைத்தது. பாண்டவர்களின் குருகுல வாசம் முடிந்த உடன், குருவுக்கு அளிக்க வேண்டிய "குரு தக்ஷிணையாக" .... "மாமன்னர் துருபதனை" கயிற்றினால் பிணைத்து கைதியாக என் முன் நிறுத்த வேண்டும்...." என்று ஆணையிட்டார். அவருடைய அன்புக்கு உகந்த வீரனான அர்ஜுனன், துருபதனை வென்று "பிணைக்கைதியாக" தனது குருவின் முன்பாக நிறுத்தினான்.

தனக்கு முன் கைதியாக நிற்கும் துருபதனைக் கண்டு துரோணர்.... "இப்போது நீ என் அடிமை.... உன் ராஜ்ஜியம் உட்பட உனது அனைத்து உரிமைகளுக்கும்

# "பழி" உணர்ச்சியின் பயணம்





நான்தான் அதிபதி... இருந்தாலும் நான், நமது பழைய நட்பினை மதித்து, இப்போது பாதி ராஜ்ஜியம் அளிக்கிறேன்... தொடர்ந்து நாம் நண்பர்களாக இருப்போம்".... என்று கூறி விடுவித்து பாதி ராஜ்ஜியத்தையும் கொடுத்தார். மனதில் அவமானம் கொண்ட துருபதன், வஞ்சனையுடன், அவரை பழி தீர்க்கும் எண்ணத்துடன்... அமைதியாகத் திரும்பினான். துரோணரை அழிக்கும் வல்லமை கொண்ட ஒரு மகனும், அர்ஜுனனை மணந்து கொள்ள தகுதி பெற்ற ஒரு மகளும் வேண்டும் என்று ஒரு யாகம் செய்தான். அக்னி குண்டத்தில் இருந்து, திருஷ்டத்யும்னன் என்ற ஒரு மகனும், திரௌபதி எனப்படும் ஒரு மகளும் தோன்றினர்.

திருஷ்டத்யும்னன் வளர்ந்து, பாண்டவர்களுடன் இணைந்து பாரத யுத்தத்தில் பாண்டவ சேனைக்கு சேனாதிபதியானான். துரோணர் கௌரவர்கள் பக்கம் போரிட நேர்ந்தது. ஒரு கட்டத்தில் அவரது மகன் அஸ்வத்தாமன் இறந்து விட்டதாக யுதிஷ்டிரனால் (பொய்யாக) உரைக்கப்பட்டவுடன், தனது ஆயுதங்களை கீழே போட்டு விட்டு தரையில் அமர்ந்தார் துரோணர். அந்தத் தருணத்தில் திருஷ்டத்யும்னன், தனது வாளால், துரோணரது தலையை வெட்டி வீழ்த்தினான்.

இதனால் வெகுண்ட, துரோணரின் மகன் அஸ்வத்தாமன், தொடர்ந்து "பழி தீர்த்துக்கொள்ள" ஒரு வெறி கொண்டான். யுத்தத்தின் முடிவில், உறக்கத்தில் இருந்த பாண்டவர்களின் மைந்தர்களை, பாண்டவர்கள் என்று நினைத்து, வாளால் வெட்டிக் கொன்றான். இந்நிகழ்வினை தொடர்ந்து, அர்ஜுனனுக்கும் அஸ்வத்தாமனுக்கும் மோதல் உருவாகியது. இருவரும் பெரும் அழிவுக்கான "பிரம்மாஸ்திரத்தை" பிரயோகம் செய்தனர். ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளையின் பேரில், அர்ஜுனன் தன்னால் பிரயோகம் செய்யப்பட்ட பிரம்மாஸ்திரத்தை திரும்பப் பெற்றான். அஸ்வத்தாமனுக்கு அந்த கலை தெரிந்து இருக்க வில்லை. அவனுடைய அஸ்திரத்தை அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த சிசுவின் மீது (அர்ஜுனனின் பரம்பரையை அழிப்பதாக நினைத்து) பிரயோகம் செய்து விட்டான். உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த சிசு ஸ்ரீகிருஷ்ணரால் காப்பாற்றப்பட்டது. அஸ்வத்தாமன்... மிகக் கடுமையான ஒரு சாபத்துடன் தண்டிக்கப்பட்டான். தனது உடலை தானே சுமந்து கொண்டு (உயிருள்ள ஆவி, பிரேதமாக உடலை சுமந்த வண்ணம்) வாழ்வின்றி அலைந்து/அழியுமாறு சாபம் பெற்றான்.

"பழி தீர்க்கும் உணர்ச்சியின் பயணம்" எவ்வளவு கொடுமையான வரலாற்றினை படைத்து விட்டது...

இளம் வயதிலேயே இது போன்ற உணர்ச்சிகளை நாம் வெறுத்து ஒதுக்கி, தீவினைகளுக்கு ஆளாகாமல், நல்வினைகளுடன் வாழ்ந்து வைகுண்ட நாயகன் நாராயணனின் அருள் பெறுவோம்.



**செல்வன் ஹ்ருதிக் நாராயண்**
**ஒன்பதாம் வகுப்பு,**
**த/பெ. திரு. எஸ். வெங்கட்ராகவன்,**
**1109– ஏ கேட், மை ஹோம் ஜ்வெல்,**
**மியாப்பூர், ஐதராபாத்**

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. சிவன்.
2. வராஹ ரூபி, பரமாத்மா.
3. சித்தாபுரா, மாத்ருகயா.
4. சரஸ்வதி நதியாகி.
5. அத்ரிரிஷி அனுசுயா.
6. ஹிமாலய புத்ரியானாள்.
7. துருவ ராஜா.
8. பௌண்டரக வாசுதேவன்.
9. நாரத முனி.
10. யது வம்சம்.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி




தெய்வீக சக்தியுடன் ஆரோக்கியத்தைத் தரும், அற்புதமான மருத்துவ குணங்கள் மிகுந்த மரம் மாமரம். மாமரத்தின் கீழ் சிவலிங்கம் தோன்றியதால் ஒரிஸா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வரத்தை ஏகாம்ர க்ஷேத்திரம் என்று புராணங்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீஏகாம்பரேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றிய தெய்வீக சக்தி மிகுந்த மாமரத்தில் உள்ள நான்கு கிளைகள் நான்கு வேதங்களாகக் கூறப்படுகின்றன.

மாவிலைகளில் லக்ஷ்மி தேவி கொலுவீற்றுள்ளதாகக் கூறுகின்றனர். ஆகையால் தான் மாந்தோரணங்களை வாயிலில் கட்டி அழகுப்படுத்துகின்றனர். இவ்வாறு அழகு படுத்துவதன் மூலம் இல்லத்தில் செல்வம் கொழிக்கும் என்றும், வாஸ்து தோஷங்கள் இருந்தால் விலகும் என்றும் பெரியவர்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமின்றி இந்த மா இலைகள் கார்பன்–டை–ஆக்ஸைடு வாயுவை அதிக அளவில் கிரகித்துக் கொண்டு நமக்கு சுவாசித்தலுக்குத் தேவையான ஆக்சிஜனை வெளியிடுகின்றது. சமஸ்கிருதத்தில் "ஆம்ரா" என்று அழைக்கப்படும் "அனகார்டியேசி" என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த மாமரத்தின் அறிவியல் பெயர் "மாங்கிபெர இண்டிகா"

தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.
99850 03156

என்பதாகும். மாங்காய், மாம்பழம் ஆகியவை நமக்கு உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன. இவைகளுடன் மாவிலை, மாம்பூ, மாம்பிஞ்சுகள், மாம்பட்டை ஆகிய பகுதிகளும் நமக்கு மருந்துப் பொருட்களாக உதவுகின்றன. இத்தகைய மருத்துவ குணங்கள் இருப்பது குறித்து நம்முள் பலருக்குத் தெரியாது. எனவே மாமரத்தின் மருத்துவ குணங்களை அறிந்து கொண்டு அதன் பயனைப் பெற்று ஆரோக்கியமாக வாழ்வோம்.

**இருமல், சுவாசக்கோளாறுகள் நீங்க :**

மாங்காயின் விதை நன்கு காய வைத்து, மிருதுவாக பொடி செய்து கொண்டு, நாள்தோறும் 2 வேளை அரை டீஸ்பூன் பொடியை தகுந்த அளவு தேனுடன் குழைத்து உட்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

**வயிற்றுப் புழுக்கள் நீங்க :**

மாங்காயின் விதையை காய வைத்து, பொடி செய்து, அதனுடன் 25 கிராம் வெல்லம் பொடியைக் கலந்து, நன்கு இடித்து காலை மாலை இருவேளை சிறு உருண்டை வீதம் உண்டால் வயிற்றுப் புழுக்கள் அழிந்து விடும்.

### பெண்களுக்கு வெள்ளைப்படுதல் குறைய :

மாங்காயில் உள்ள விதையை எடுத்து கலந்து காய வைத்து, நன்கு பொடி செய்த மாங்காய் விதைபொடி, சக்கரை, ஒவ்வொன்றையும் 20 கிராம் வீதம், வேளைக்கு 3 முதல் 5 கிராம் பொடியை அரை டம்ளர் நீரில் கலந்து குடித்து வந்தால் இந்த உபாதை குறையும்.

### இரத்தக் கழிசல் (அ) சீதபேதி குணமாக :

நாள்தோறும் மூன்று வேளை 2–3 கிராம் வீதம் மாவிதைப் பொடியை 100 மி.லி. மோருடன் கலந்து உட்கொண்டால் சீதபேதி குறையும்.

அதுமட்டுமின்றி வயிற்றில் எரிச்சல், வாய், மூக்கு பல் ஈறுகள் மற்றும் மலத்துவாரம் ஆகியவற்றில் இருந்து இரத்தம் வருதல், மேலும் பெண்களுக்கு மாதவிடாயின் போது அதிகமாக இரத்தப்போக்கு ஏற்படுதல் ஆகியவை குறையும்.

### பொடுகுத் தொல்லை நீங்க :

வாரத்திற்கு 2 முறை தகுந்தளவு மாவிதைப் பொடியுடன் நீர் சேர்த்து தலைக்கு பூசி, ஒரு மணி நேரத் திற்குப்பிறகு தலைக்கு குளித்தால் இந்த பிரச்சனை நீங்கும்.



### ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*கா தே காந்தா தநகத சிந்தா*
*வாதுல கிம் தவ நாஸ்தி நியந்தா।*
*தரிஜகதி ஸஜ்ஜன சங்கதி ரேகா*
*பவதி பவார்ணவ தரணே நௌகா॥*

**மனிதனின் மனம் பொய்யான மயக்கத்தை கொண்டது என்றதொரு உண்மைதனை புலப்படுத்தி செய்யப்படும் உபதேசம் இது:**

**“மனைவி, செல்வம் இவற்றையே எப்போதும் நினைத்துக் கொண்டு வாழ்கிறாய். மனைவி, பணத்தாசை போன்ற இச்சைகள் உன்னை எப்போதும் காப்பாற்றாது. கடைத்தேற்றாது. “பிறவி” எனப்படும் பெருங்கடலில் இருந்து “நல்லோரின் சகவாசம்” மட்டுமே உன்னை கரை யேற்றும் ஓடம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்” என்பதே கருத்து.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

### பேன் கடித்தல் மறைந்து முடி வளர்தல் :

மாவிதைப் பொடி காயவைத்து, நெல்லிக்காய் பொடியுடன் வைத்துக்கொண்டு, நாள்தோறும் 2 முறை தகுந்தளவு பொடியை பசும்பாலுடன் கலந்து (மிருது வாக) நன்கு குழைத்து பேன் கடித்த இடத்தில் பூசி வந்தால் முடி வளரும்.

### மாவிதையால் முடி வளர தைலம் :

ஒரு இரும்பு வாணலியில் ஒரு கிலோ எள் எண் ணெய் எடுத்துக் கொண்டு, அதில் கால் கிலோ, மாவிதைப் பொடியையும், கால் கிலோ திரிபலா கலந்து ஒரு வாரம் பொடியை அப்படியே வைக்க வேண்டும்.

நாள்தோறும் காலை, மாலை இருவேளை நன்கு கலந்து விட வேண்டும். பின்னர் அத்தைலத்தை ஒரு சீசா வில் வைத்துக் கொண்டு, வாரத்திற்கு 1–2 முறை தலைக்குப் பூசி மூன்று மணி நேரம் கழித்து தலைக் குளி யல் செய்து வந்தால் நரைமுடி, முடி கொட்டுதல் போன் றவை குறைந்து முடி கருமையாக நன்கு வளரும்.

### மாதவிலக்கின் போது ஏற்படும் அதிக இரத்தப் போக்குக் குறைய :

400 மி.லி. நீரில், 100 கிராம் மாமரப் பட்டையைப் போட்டு, 200 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறியபின் வடிகட்டி காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் குடித்து வந்தால் இந்த உபாதை குறையும். இதனை வாயில் போட்டு கொப்பளித்து வந்தால் வாய்ப் புண், தொண்டை வலி மற்றும் பல் வியாதிகள் குறையும். பற்களும் உறுதியாக இருக்கும்.

### வயிற்றுப்போக்கு குறைய :


நாள்தோறும் 3 அல்லது 4 முறை 10–15 மாவிலை களை அதாவது இளந்தளிர்களை எடுத்து மிருதுவாக செய்து கொண்டு சிறு உருண்டைகளாக விழுங்கி 50 மி.லி. தயிரை உட்கொண்டால் வயிற்றுப்போக்கு குறையும்.

### குறிப்பு :

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

ஆந்திரக்கவி







# அன்னமய்யா அருளிய கீர்த்தனைகள்

– திரு. எம்.எஸ். விஜய், சென்னை.

யுகங்கள் நான்கு. ஒவ்வொரு யுகத்திற்கு ஒவ்வொரு தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தந்த யுக தர்மத்தை பின்பற்றுவதன் மூலம் நாம் எடுத்த பிறவியின் பயனை பெற்று முக்தி அடைய அத்தர்மங்கள் வழி வகுக்கின்றன. முதல் யுகமான கிருத யுகத்தில் தியான மார்க்கமே மோக்ஷ தர்மமாகக் கடைபிடிக்கப்பட்டது. இரண்டாம் யுகமான திரேதா யுகத்தில் யாகங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மூன்றாவதான துவாபர யுகத்தில் பூஜா விதானங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இவையனைத்தையும் விட நான்காவது யுகமான கலியில் – நாம் வாழும் இந்த காலக்கட்டத்தில் சுலபமான வழியாக "ஹரி நாம சங்கீர்த்தனம்" செய்து உய்யும் படியாக சொல்லப் பட்டிருக்கிறது.

ஜபிப்பதை விட தியானம் செய்தால் நமக்கு கோடி லாபமாம். தியானத்தை விட கோடி நன்மைகள் ஆன்மீக விஷயங்களில் ஒன்றிப் போவதில் இருக்கிறதாம். அதை விட கோடி புண்ணியம் நமக்கு பகவன் நாமத்தை பாடுவதால் கிடைக்குமாம். பகவன் நாம சங்கீர்த்தனத்தை விட உயர்ந்த உபாயம் வேறொன்றில்லையாம். அத்தகைய ஹரி நாம கீர்த்தனைகளை இயற்றியவர்கள் பலர். அவர்களில் தெலுங்கு மொழியில் "அன்னமய்யா" பல்லாயிரக்கணக்கான ஹரி நாம கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், ராஜம் பேட்டை தாலுக்காவிற்கு உட்பட்ட தாள்ள பாக்கம் என்னும் சிறு கிராமத்தில் இலக்கமாம்பா, நாராயணசூரி என்னும் புண்ணிய தம்பதியருக்கு தொடர் ஆண்டு 1408 இல் வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் திருவேங்கடமுடையானுடைய (கட்கம்)வாளின் அம்சமாகப் பிறந்தார். சிறு வயதிலேயே ஹரி நாம சிந்தனையோடு வளர்ந்த அன்னமய்யா தனது 8ஆம் வயதில் "கோவிந்தா கோவிந்தா" என்று கோஷமிட்டுக்கொண்டு திருமலைக்குச் சென்ற பக்த கோஷ்டியுடன் பெற்றோர்களிடம் சொல்லிக் கொள்ளாமலேயே சென்றார். அவருடன் வந்தவர்கள் மலை ஏறி சென்று விட்டனர்.

பாலகனான அன்னமய்யா சிரமப்பட்டுக் கொண்டு "முழங்கால் முறித்தான்" என்னும் இடத்தை அடைந்ததும் சோர்வுற்று அயர்ந்து தூங்கி விட்டார். அவருடைய சோர்வை போக்கும் வகையில் திருமகள் பிரசாதங்களை வழங்கினாள். புத்துணர்வுடன் அன்னமய்யா "ஸ்ரீவேங்கடேஸ்வர சதகம்" எனும் நூறு பாடல்களைப் பாடினார்.

இவ்வாறாக திருமலை அடைந்த அன்னமய்யா திருக் குளத்தில் நீராடி திருவேங்கடமுடையானின் தரிசனத்திற்குச் சென்றபோது கோயிலின் வாயில் மூடப்பட்டிருந்தது. மனம் உருகி பகவானைப் பாடினார். மூடியிருந்த கதவுகள் தானாகவே திறந்து அன்னமய்யாவிற்கு திருமாலின் திவ்ய தரிசனம் கிடைத்தது.



இவ்வாறு திவ்ய தரிசனம் கிடைத்த அன்னமய்யா பல்லாயிரக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றினார். திருமலை திருப்பதி தேவஸ்தானம் அவரின் நினைவாக "அன்னமாசாரியா செயல் திட்டம்" ஒன்றை ஏற்படுத்தி அவருடைய கீர்த்தனைகள் பல வெளியிட்டு கௌரவப்படுத்தி உள்ளது



# 2020
# மார்ச் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் சுக்ரன் | சந்திரன் | ராகு |
| (புதன்) நெப்ட்யூன் சூரியன் | மார்ச் - 2020<br>10 – புதன் –வ.நி.<br>14 – சூரியன் –மீனம். | | |
| சனி | | | |
| ப்ளூட்டோ செவ்வாய் குரு கேது | | | |

**மேஷம்** — பெரும்பாலான கோள்களின் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. தைரியக்காரகன் செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் உலவிடுவதால் இனிய வாய்ப்புகள் வாயில் தேடி வரும். தன–ஸப்தமாதிபதி சுக்ரன் ராசியில் அமர, அவரை குரு நோக்குவதால் தடைப்பட்டுக் கொண்டிருந்த திருமணம் விரைவில் நடைபெறும்.

**ரிஷபம்** — ராசி நாயகன் சுக்ரன் 12ல் உலவிடினும் குரு பார்வை உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் பதிவதால் குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். பத்தாம் வீட்டிற்குரிய சனி பகவான் ஒன்பதில் உள்ளதால் ஆன்மீக வழியில் நடப்பவர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னுதாரணமாகவும் விளங்குவீர்கள்.

**மிதுனம்** — ராசிநாயகன் 9ல் சஞ்சரிக்க, தொழில் வீட்டிற்குரிய குரு ஏழிலிருந்து ராசியை நோக்குகிறார். எழுத்து, பத்திரிக்கை, தகவல் தொடர்பு துறை ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பெரும் முன்னேற்றம் உண்டாகும். நாவன்மையால் பெரும் பொருள் சேரும். தந்தை வழி சொத்து, செல்வம் பெறக்கூடும்.

**கடகம்** — குருவின் பார்வை தன–குடும்பஸ்தானத்தில் பதிவதால் வெற்றியும், தன வரவும் கிடைக்கும். மாத ஆரம்பத்தில் ராசி நாயகன் சந்திரன் லாபஸ்தானத்தில் உச்சபலம் பெற்றுத் திகழ்கிறார். 5 மற்றும் 10க்கு அதிபதியான செவ்வாய் 6ம் வீட்டில் உள்ளதால் தொழில் மாற்றச்சிந்தனைகள் எழும். ஆரோக்கியம் சீராகும்.

**சிம்மம்** — ராசி நாயகன் தன–லாபாதிபதி புதனுடன் ஏழில் உள்ளதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். தனுசு ராசியில் சஞ்சரிக்கும் செவ்வாயால் சொத்து சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள்.

**கன்னி** — மாத ஆரம்பத்தில் லாபாதிபதி சந்திரன் பாக்கிய ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். பழைய வீட்டைப் புதுப்பிக்கும் எண்ணம் மேலோங்கும். அஷ்டமாதிபதி செவ்வாய் நான்கில் சஞ்சரிப்பதால் பெற்றோர்களின் உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகலாம்.

**துலாம்** — செவ்வாயும் குருவும் 3ல் உலவிடுவதால், பேச்சுத் திறமையும், கற்பனை வளமும் கூடும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். வியாபாரம், கணிதம், எழுத்து, பத்திரிக்கை, இசை, நடனம், நாடகம் போன்ற துறைகளில் உள்ளவர்கள் மேன்மை அடைவார்கள். பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சி காணலாம்.

**விருச்சிகம்** — ராசி நாயகன் குருவுடன் இணைந்து தனஸ்தானத்தில் உலவிடுகிறார். கலைத்துறை ஊக்கம் தரும். மதிப்பும், மரியாதையும் உயரும். புதிய சொத்துக்கள் வாங்கி மகிழ்வீர்கள். மாதப்பிற்பாதியில் சூரியன் ஐந்தாமிடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். எடுத்த காரியங்களில் வெற்றிப் பெறுவீர்கள்.

**தனுசு** — ராசிக்கு 2ல் சனியும், ராசியில் குருவும், செவ்வாயும் உலவிடுவது சிறப்பாகும். குடும்ப நலம் சிறக்கும். பணப்பெருக்கம் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் நல்ல ஒத்துழைப்பு நல்குவர். தொழில் விருத்தியடையும். சமுதாய நல முன்னேற்றப் பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும்.

**மகரம்** — உடல் நலம் சீராகும். தன வரவு கூடும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் தொடரும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் நலம் உண்டாகும். சுக்ரன் நான்கில் உலவிடுவதால் புதிய நிலம், மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய வேலையில் அமரும் வாய்ப்பும் உண்டு.

**கும்பம்** — உங்கள் ராசிக்குப் பதினொன்றில் குரு, கேது, செவ்வாய் உலவிடுவது மிகவும் சிறப்பாகும். தொழிலில் வளர்ச்சிக்கான சந்தர்ப்பம் உருவாகும். பிரபலங்கள், தனவந்தர்களின் ஆதரவு கிட்டும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். நிறுவன நிர்வாகத் துறையினருக்கு செழிப்பான சூழ்நிலை நிலவி வரும்.

**மீனம்** — பத்தில் குரு, செவ்வாய், கேது உலவிடுவது மிகவும் சிறப்பானது. அரசு சம்பந்தமான காரியங்கள் விரைவில் நிறைவேறும். அதிஷ்டவாய்ப்புகள் தேடி வரும். கலைத்துறையினருக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவி வரும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.




# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

உயிர்மெய் எழுத்துக்களை எழுதும்போது, பயன் படுத்த வேண்டிய உயிரெழுத்துக் குறில் நெடில் குறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| எழுத்து | குறி | எழுத்து | குறி | எழுத்து | குறி | எழுத்து | குறி | எழுத்து | குறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| अ<br>அ | | ई<br>ஈ | ी | ऋ<br>ரு | ृ | ए<br>ஏ | | औ<br>ஔ | ौ |
| आ<br>ஆ | ा | उ<br>உ | ु | ॠ<br>ரூ | ॄ | ऐ<br>ஐ | ै | अं<br>அம் | ं |
| इ<br>இ | ि | ऊ<br>ஊ | ू | ऌ<br>லு | | ओ<br>ஓ | ो | अः<br>அஹ: | ः |

– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி, சென்னை, 99404 28830

மேலும் வளரும்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

***குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!***

சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.

### யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

### பெரியோர்கள் செய்ய வேண்டியன...

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

### நிபந்தனைகள் :

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை
(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை
(டி.டி. எண்.) : தேதி:

இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

---

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

# ஒண்டிமிட்டா
# ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்
# 02-04-2020 முதல் 10-04-2020 வரை







**06-04-2020**
திங்கட்கிழமை
பகல் : மோஹினி சேவை
இரவு : கருட சேவை

**02-04-2020**
வியாழக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சேஷ வாகனம்

**07-04-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : சிவதனுர்பாணாலங்காரம்
இரவு : வரவேற்பு,
கல்யாணோத்ஸவம்,
யானை வாகனம்

**03-04-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : வேணுகானாலங்காரம்
இரவு : ஹம்ச வாகனம்

**08-04-2020**
புதன் கிழமை
பகல் : திருத்தேர்

**04-04-2020**
சனிக்கிழமை
பகல் : வடபத்ரசாயி அலங்காரம்
இரவு : சிம்ம வாகனம்

**09-04-2020**
வியாழக்கிழமை
பகல் : காளியமர்தனாலங்காரம்
இரவு : குதிரை வாகனம்

**05-04-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : நவனீத கிருஷ்ணாலங்காரம்
இரவு : ஹனுமத்சேவை

**10-04-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-02-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

